[Reg]istered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU
முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 001




05 கனவு



06 விருது



[0]8 கறுப்பு



# உள்விவகார மேடையாக பொதுநலவாயக் கூட்டம்

## பிரிட்டன், கனடா மீது அரசு விசனம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களின் கூட்டத்தை பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் இலங்கையின் உள்விவகாரம் தொடர்பில் தமது நிலைப்பாடுகளை தெரிவிக்கும் மேடையாக மாற்றிக் கொண்டமை கவலைக்குரிய விடயம் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொர்டர்பாக இலங்கை வெளி விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நியூயோர்க்கில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் பிரித்தானியாவும், கனடாவும் பொது நலவாய அமைப்பின் இணக்கப்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் மீறிச் செயற்பட்டன.

இந்த நாடுகளின் பிரதிநிதிகள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் இலங்கை அரசு நிரந்தரமாக செயற்படுவது அவசியம் எனக் கூட்டத்தின் போது தொடர்ந்தும் கோரிக்கை விடுத்தமை முழுமையான அநீதியாகும்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்த உறுப்பு நாடுகள் எடுத்துள்ள தீர்மானத்தை பிரித்தானியா ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொண்டமை இலங்கையின் கவலைக்கு காரணமாகியுள்ளது.



இலங்கை தொடர்ந்தும் பொது நலவாயத்தின் சம்பிரதாயம் மற்றும் பெறுமதிகளின் அடிப்படை

19 ஆம் பக்கம் பார்க்க...

## வீதி விபத்தில் சிக்கி கிராம அலுவலர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வல்லை வெளியில் இடம் பெற்ற வீதி விபத்தில் சிக்கி கிராம அலுவலர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று இரவு 7.45 மணியளவில் வல்லை வெளியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த வீதித் திருத்தத்திற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரம் ஒன்றுடன் மோதுண்டமையால் மேற்படி விபத்து நேர்ந்தது.

மந்திகை கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றும் சோமநாதர் கிருஷ்ணராஜா என்ற கிராம அலுவலரே இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் விபத்தில் காயமடைந்ததும் அச்சுவேலி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ் போதனா மருத்துவமனைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க...

## [பொ]ய்யான தகவல்களை அளிப்பது [பொ]றுப்பான எம்.பி.க்கு நாகரிகமல்ல

### [சி]றிதரனின் குற்றச்சாட்டை மறுக்கிறார் சந்திரகுமார்



[வ]டமாகாணசபைத் தேர்தலை [ஒ]ட்டி எமது கட்சியினால் [தமி]ழ்த் தேசியக் கூட்டமைப்பின் [ஆத]ரவாளர்கள் மீது தாக்குதல் [நட]த்தப்பட்டுள்ளதாக நாடாளு[மன்]ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்[றம்] சாட்டியுள்ளார்.

இது முற்றிலும் தவறான குற்[றச்]சாட்டாகும். தேர்தல் பரப்பு[ரைக்]க்காலத்திலோ, தேர்தலின் போதோ, தேர்தலுக்கு பின்னரோ எத்தகைய வன்முறை நடவடிக்கைகளிலும் எமது கட்சியும் ஆதரவாளர்களும் ஈடுபடவில்லை அத்துடன் அமைதியாக தேர்தலை நடத்தவேண்டும் என்பதற்காக மிகவும் கண்ணியமாகவும் பொறுப்புடனும் ஜனநாயகத்தின் மீதான பற்றுறுதியுடனும் நாம் நடந்துகொண்டோம் இதைக் கிளிநொச்சி மாவட்ட மக்கள் நன்கறிவார்கள் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் வெளியிட்டுள்ள மறுப்பறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தலின்போது பகிரங்கமாக மேடைகளில் அவதூறு பரப்புரைகளில் ஈடுபட்டதுடன் தேர்தலில் தாம் வெற்றிப்பெற்ற பின்னர் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் எமது ஆதரவாளர்கள் மீது வன்முறை தாக்குதல்களை நடாத்தியது சி.சிறிதரனின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களே. தேர்தல் வெற்றியை அடுத்து எமது ஆதரவாளர்களின் வீடுகளுக்கு வெடி கொளுத்திப் போட்டு அட்டகாசம் செய்ததுடன் தேர்தலின்

19 ஆம் பக்கம் பார்க்க...

## இளம் யுவதி விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் அரசடி வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று இரவு 9.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இராசவீதி, கோப்பாயைச் சேர்ந்த எஸ்.தீபிகா (வயது-20) என்பவரே மரணமடைந்தார்.

மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். (25)

## [ஐந்தா]புலமைப் பரிசில் பரீட்சை; [...] பெறுபேறுகள் இன்று

(கொழும்பு)

[தர]ம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று [...]வெருமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. [இன்]று பிற்பகல் வேளையில் பரீட்சைப் பெறுபேறுகளை [இணை]யத்தளத்தில் வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் ஆணை[யாளர் நா]யகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார். [திணைக்]களமைய www.donets.lk என்ற இணையத்தளத்தில் தரம் [5 புலமை]ப் பரிசில் பெறுபேறுகளைப்

19 ஆம் பக்கம் பார்க்க...

## முதல்வர் விக்னேஸ்வரன் ஆளுநரைச் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட சி.வி. விக்னேஸ்வரன் நேற்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆளுநர் அலுவலகத்திற்கு விஜயம் செய்த அவர் சுமார் 15 நிமிடங்கள் வரை கலந்துரையாடியதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சந்திப்பின் போது, சி.வி.விக்கினேஸ்வரன்

19 ஆம் பக்கம் பார்க்க...

## [பொ]துநலவாய உச்சி மாநாட்டில் [பிரதம]ர் மன்மோகன் பங்குபற்றுவாரா?

### [குர்ஷி]த் வருகையின் பின் தெரியும் முடிவு

(கொழும்பு)

[இந்]திய வெளிவிவகார அமைச்[சரின் உத்தியோகபூர்]வ்வார இலங்கை விஜயத்[தின் பின்]னர் எதிர்வரும் நவம்பர் [மாதம் நடை]பெறவுள்ள பொது[நலவாய] மாநாட்டில் இந்திய அர[சின் சார்பி]ல் கலந்து கொள்[வா]ரென்பது தெரிய வருமென [அரசா]ங்கம் தெரிவித்துள்ளது.

[இ]து தொடர்பாக இலங்கை [வெளி]விவகார அமைச்சின் உத்தி[யோக]பூர்வ பேச்சாளரும், மேல[திகச்] செயலாளருமான ரொட்னி [பெரே]ரா தெரிவித்தாவது,

[இ]லங்கை வெளி விவகார [அ]மச்சர் ஜீ.எல்.பீரிஸ் அண்[மை]யில் இந்தியாவுக்கு விஜயம் [மேற்]கொண்ட போது விடுத்த வேண்டுகோளுக்கமைய நல்லெண்ண அடிப்படையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் இலங்கைக்கான விஜயம் அமையவுள்ளது.

முதல் தடவையாக இலங்கை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித

19 ஆம் பக்கம் பார்க்க...

## ஈ.பி.டி.பி.க்கு அரசியல் நாகரிகம் தெரியும்; சிறிதரனின் குற்றச்சாட்டுக்கு கண்டனம்

தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது வன்னியிலும், தீவகப்பகுதியிலும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகவும், வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட படுதோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் கூட்டமைப்பின் ஆதரவாளர்களைத் தாக்கி வருவதாகவும். இத்தாக்குதல் சம்பவங்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் ஈடுபட்டிருப்பதாகவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியிருப்பதை நாம் கண்டிக்கின்றோம்.

கிளிநொச்சியிலேயே அதிகமான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், மக்கள் அஞ்சி வாழ்வதாகவும் சிறிதரன் குறிப்பிட்டிருக்கின்றார். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் இவர் எழுந்தமானமாக குற்றம் சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஈ.பி.டி.பி.யாகிய நாம் எமது மக்களின் விருப்பங்களை எப்போதும் மதித்து .நடந்துள்ளோம். ஜனநாயகத்தை மீண்டும் வடக்கில் ஏற்படுத்த துணிந்து செயலாற்றியவர்கள். எமக்கு யாரையும் தாக்கவேண்டிய

19 ஆம் பக்கம் பார்க்க...

### நன்றியுடன்...

உங்கள் கைகளில் தவழும் தினமுரசு நாளிதழ் இன்று நான்காவது ஆண்டில் கால் பதிக்கிறது. தினமுரசின் அபார வளர்ச்சிக்குத் தோள்கொடுத்து பங்களித்த வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள், பிராந்தியச் செய்தியாளர்கள் அனைவரையும் நன்றியுணர்வுடன் நெஞ்சில் நிறுத்திக் கொள்கின்றோம்.

தினமுரசு குடும்பம்.

# ஊழியர்கள் மீது தாக்குதல்; கண்டித்து பணிப்புறக்கணிப்பு



(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் சிலர் இனந்தெரியாத சிலரால் நேற்று முன்தினம் தாக்கப்பட்டமையைக் கண்டித்து சபையின் சுகாதாரத் தொழிலாளர்களினால் நேற்றுக் காலை 7.00 மணியிலிருந்து அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் உடன் கைதுசெய்யப்பட வேண்டும். அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். நல்லூர் பிரதேச சபைக்கு முன்பாக வாயில் பக்கமாக இத் தொழிலாளர்கள் அதிகளவில் குழுமியிருந்தனர்.

பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார், உபதவிசாளர் கோமதி ரவிராஜ், எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாசன் மற்றும் சில உறுப்பினர்களும் காணப்பட்டனர். தாக்குதல் நடத்தியோர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என அவர்களும் கேட்டுக்கொண்டனர்.

கோப்பாய் பொலிஸாரும் சமுகமளித்திருந்தனர். தாக்குதல் நடத்தியோர் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என அவர்கள் தெரிவித்தனர்.

தாக்குதல்தாரிகள் கைதுசெய்யப்படாவிட்டால் இதர தொழிற் சங்கங்களையும் இணைத்து தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம் என தொழிற் சங்கங்கத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# மருத்துவர்கள் இடமாற்றம்; மருத்துவ சேவையில் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கான இடமாற்றம் நேற்று முதற்கட்டமாக வழங்கப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்ட பட்டியலின்படியுள்ள ஒருதொகுதி வைத்தியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து இடமாற்றம் வழங்கப்படவுள்ளவர்களுக்கான கடிதங்கள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவித்த அவர், இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு உட்பட பல பிரிவுகளில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் நெருக்கடி நிலையை வைத்தியசாலை எதிர்நோக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (பா)

# சாவகச்சேரியில் விசேட நூலக சேவை

## சிறுவர்களுக்கு தனிப்பிரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள மீசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான இரவல் வழங்கும் பிரிவு தனியலகாக ஆரம்பிக்கவுள்ளதாக மன்றத்தின் தவிசாளர் அறிவித்துள்ளார். இதுபற்றி நூலகர் திருமதி தயாநிதி பாலச்சந்திரன் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் பொது நடைமுறையின் கீழேயே சிறுவர்களுக்கான நூல் விநியோகம் நடைபெற்று வந்ததாகவும் இம் மாதம் கொண்டாடப்படவுள்ள தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக சேவைகள் விரிவாக்கல் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கான நூல்கள் தனி நடைமுறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், 14 வயதுக்குட்பட்ட மாணவர்கள் இதற்கெனவுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து நூல்களை இரவலாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தொிவித்தார். (11)

# ஆனைக்கோட்டையில் மண்டபம் திறப்பு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம அலுவலர் பிரிவிலுள்ள முள்ளி கிராமத்தில் இன்று காலை 9.00 மணிக்கு பலநோக்கு மண்டபம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

ஆனைக்கோட்டை கலைஒளி சனசமூக நிலையத்தலைவர் றொபின்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவுக்கான தலைவர் எபனா ரிசிங்கோ, கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யு.என்.டி.பி. நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர் ஏசினா தில் கிரமி, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (104)

# கொள்ளிக்குடம் சுமந்தவருக்கு விழுந்தது கத்திக்கொத்து

(திருநெல்வேலி)

மயானத்தில் கொள்ளிக்குடம் கொண்டுசென்ற ஒருவர் கொள்ளிக்குடத்தில் கத்தியால் கொத்துவதற்குப் பதிலாக அவரது தோளில் கொத்தப்பட்டதால் மயானத்தில் நின்றவர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை தாவடி இந்து மயானத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

தாவடி மானிப்பாய் வீதியில் ஒருவர் காலமாகியிருந்ததார். இவரது இறுதிக் கிரியைகள் தாவடியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக அன்று மாலை தாவடி இந்து மயானத்திற்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டது. கொள்ளிக் குடத்தை இறந்தவரின் மைத்துனர் தோளில் சுமந்து சென்றார்.

தீவைப்பதற்கு முதல் உடலத்தை மைத்துனர் சுற்றிவரும் போது கொள்ளிக்குடத்தில் கத்தியால் துவாரம் போட்டு வருவதற்காக அவருக்குப் பின்னால் ஒருவர் கத்தியோடு வருவது வழமையாதலால் மயானத்தில் உடலங்களை எரியூட்டுவதற்கு உதவி செய்யும் தொழிலாளி ஒருவர் இதற்காக வந்துள்ளார்.

ஆனால் அளவுகடந்த மது போதையில் காணப்பட்ட இந்நபர் கொள்ளிக்குடத்தில் கத்தியால் கொத்துவதற்கு பதில் கொள்ளிக்குடத்தை தோளில் சுமந்து சென்ற மைத்துனரின் தோளில் கொத்தியுள்ளார். இதனால் அவரது தோளில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

கூடியிருந்தவர்களில் ஒருவர் திடீரென்று பாய்ந்து சென்று கத்தியைப் பிடுங்கிக் கொண்டதினால் மேலும் விபரீதம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

தொழிலாளி பலராலும் கடும் கண்டனத்துக்குள்ளானார். (137)

# ஆமை வேகத்தில் வீதி புனரமைப்பு

(முழங்காவில்)

பூநகரி நகர்ப்பகுதியில் மன்னார் வீதி, பரந்தன் வீதிகள் சந்திக்கும் பிரதான சந்தியில் காப்பெற் வீதியாக மாற்றும் வேலைகள் ஆமை வேகத்தில் நடைபெறுவதால் பயணிகளும் வாகனங்களும் பெரும் சிரமமடைவதாக தெரிவிக்கப்படுகிறது. (112)

# மும்மொழிக் கவிதைநூல் யாழில் நேற்று வெளியீடு




(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் ரஜீவ விஜயசிங்கவின் "மெறோட் இமெஜ்" என்னும் மும்மொழிக் கவிதை நூல் (மொழிபெயர்ப்பு) வெளியீட்டு நிகழ்வு நேற்று பிற்பகல் யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியன் கோணரில் நடைபெற்றது.

இந்நூலின் பிரதியை பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க வெளியிட அதனை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், இந்தியத் துணைத் தூதர் மகாலிங்கம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (பா)

# நகை திருடியவர்கள் வசமாக சிக்கினர்

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் கடந்த 10 ஆம் திகதி நகையை களவெடுத்துச் சென்ற இரண்டு பெண்கள் நேற்று அதே நகைக்கடையில் வைத்து கடைக்காரர்களால் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்களும் குறித்த நகைக்கடையில் கடந்த 10 ஆம் திகதி சுமார் 103,500 ரூபா பெறுமதியான நகைகளைக் களவெடுத்திருந்தமை அந்த நகைக்கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி கமராவில் பதிவாகியிருந்ததாகவும் அதன் அடிப்படையில் [illegible]றையதினம் தப்பித்த இரு [illegible]களும் மீண்டும் அதே கடை[illegible] வந்திருந்தபோதே குறித்த நகை[illegible] கடைக்காரர்களினால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த பெண்கள் இருவரும் யாழ். பொலிஸாரினால் வி[illegible]ணைக்குட்படுத்தப்பட்டிருப்ப[illegible]வும் மேலும் தெரிவிக்கப்படு[illegible]றது. (பா)


# மட்டுவிலில் இன்று சிறுவர் தின விழா

(சாவகச்சேரி)

சிறுவர் தினத்தை முன்னிட்டு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாலய முதல்வர் சி.பேரின்பநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வரதீஸ்வரி சத்தியேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விசேட முதன்மை ஆசிரியர் ப.கனகரத்தினமும் கௌரவ விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண [illegible] நிலை ஆங்கில உதவிக் கல்[illegible] பணிப்பாளர் செல்வி ஞானேஸ்வரி குமாரசாமி ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர். தொடர்ந்து சிறுவர் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# வேலணை மீனவர்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு




(வேலணை)

தீவகம் தெற்கில் கடற்றொழிலாளர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச இணைப்பாளரும், பிரதேச சபைத்தவிசாளருமான சிவராசா (போல்) தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய தினம் தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தில் பெண்கள் விவகார அமைச்சினால் கடற்றொழிலில் [illegible] பெண்களுக்கான உபகரணங்[illegible] வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தின் செயலர் திருமதி மஞ்சுளா சதீஸனும் [illegible]டமிடல் பணிப்பாளர் திமதி மீராதிசாநாயகம்பிள்ளையும் பெண்கள் விவகாரப் பணியகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## உழவு இயந்திரத்தை பயன்படுத்தும் செக்கிழுக்கும் தொழிலாளர்கள்



மல்லாவிப் பிரதேசத்தில் செக்கில் நல்லெண்ணை ஊற்றும தொழிலாளர்கள் தற்போது செக்கில் மாடுகளுக்குப் பதிலாக உழவு இயந்திரத்தை பூட்டி செக்கிழுப்பதைக் காணமுடிகிறது.

இதற்கு நவீன இயந்திரங்கள் வந்துள்ள போதிலும் பாரம்பரியமாக செக்கை பயன்படுத்தி நல்லெண்ணை ஊற்றும் தொழிலாளர்கள் தற்போது உழவு இயந்திரத்தை பயன்படுத்தி மிக இலகுவாக இத்தொழிலை செய்கின்றனர்.

இச்செக்கில் 60 கிலோ எள்ளு போட்டால் 30 போத்தல் நல்லெண்ணை எடுக்க முடியும் என தொழிலாளி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நல்லெண்ணை ஒரு போத்தல் 500 முதல் 550 ரூபா வரை விற்பனையாவதால் நல்லெண்ணைக்கு எப்போதும் கிராக்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(140)

# வவுனியா நகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு

தேசிய உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வவுனியா நகர சபையினால் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக நகர சபையின் செயலாளர் கே.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபையினால் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் வருடாந்தம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி இந்தவருட நிகழ்வுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் 21 ஆம் திகதி கோவில் பகுதியில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளதுடன் இதில் கட்டட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் ஆதனப் பெயர் மாற்றல்கள் துவிச்சக் கரவண்டி பதிவுகள்,தொற்று நோய் மருந்துச் சேவை, கால்நடை மருத்துவம் மற்றும் நாய்களுக்கான தடுப்பூசிகளும் ஏற்றப்படவுள்ளன.

தொடர்ந்து 22 ஆம் திகதி வருமான மேம் பாட்டுக்காக வாகனங்கள் மூலம் நடமாடும் வருமான சேகரிப்பும் 23 ஆம் திகதி பொது இடங் களில் சிரமதானங்களும் சிறந்த உணவகங்களை வகைப்படுத்தி பரிசில் வழங்கலும், எலிகாய்ச்சல் பற்றி பாடசாலை மாணவர் களுக்கு அறிவூட்டல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. 24 ஆம் திகதி மக்கள் பயன் பாட்டு தினமாக தெரு விளக்குகள் பொருத்தும் செயற்பாடுகளும் இடம்பெறவுள்ளது.

25 ஆம் திகதி மரம் நாட்டும் நிகழ்வும் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் வவுனியாவில் குடிநீர் முகாமைத்துவத்தில் எதிர்கால சாவல்களும் அதனை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளும் என்னும் செயற்பாடும் இடம்பெறவுள்ளது.

27 ஆம் திகதி கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி தினத்தில் புதிய நூல்கள் காட்சிப்படுத்தலும் வாசகர்களுக்கிடையிலான போட்டிகளும் நடமாடும் நூலக சேவையும் பார்வையற்றவர்களுக்கான பாடல் போட்டியும் இடம்பெறும்.

இறுதிநாளான 28 ஆம் திகதி விளையாட்டு மற்றும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

## சனீஸ்வர ஹோமம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூசைகள் புரட்டாதி சனியை முன்னிட்டு ஒவ்வொரு சனிக் கிழமையும் இடம்பெற்று வருகிறது.

இதில் சனிக்கிழமையில் முற்பகல் 11 மணிக்கும் மாலை 430 மணிக்கும் சனீஸ்வர ஹோமம் இடம்பெற்றுவருகிறது.

இதேவேளை நவக்கிரக விக்கிரகங்கள் அமைந்துள்ள ஆலயங்களிலும் புரட்டாதி சனியை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## மீள்குடியமர்வு கொடுப்பனவு பெறாதோர் கவனத்திற்கு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நலன்புரி நிலையங்கள் மற்றும் தடுப்பு முகாம் களிலிருந்து விடுவிக்கப்பட்டு சொந்த இடங்களில் மீள்குடிய மர்ந்தவர்களுக்கான வாழ் வாதார உதவிக்கொடுப்பனவை பெறாதவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

மீள்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிக்கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட நிலையில் நிதியைப் பெறாதவர்களின் விபரங்கள் திரட்டப்படுவதுடன் இவர்கள் தத்தமது கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

தொடர்ச்சி....

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலகத்தினால் சிறுவர், முதியோர் மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

**ஓவியப்போட்டி**

**முதியோர் தினம்**

ஆரம்பப்பிரிவு

ர.மரிதிசன் (மு.விசுவநாதர் ஆரம்ப.பா),ச.சஞ்சீவன், ஜெ.ஜெயப்பிரபாலினி (மு.வள்ளிபுனம் க.உ.வி).

கனிஷ்ட பிரிவு

சி.தூயவன் (மு.சுதந்திரபுரம அ.த.க.பா), றோ.பிறேமன் (மு.வள்ளிபுனம் க.உ.வி), ம.பகலன் (மு.விசுவமடு ம.வி)

இடைநிலைப்பிரிவு

ஜெ.தமிழ்க்கீரன் (மு.சுதந்திரபுரம் அ.த.க.பா), ச.ஜக்சன் (மு.உடையார்கட்டு.ம.வி), இ.சிலம்பரசன் (மு.குரவில் த.வி)

மேற்பிரிவு

மு.மேனகா (மு.விசுவமடு ம.வி), ஜெ.நிறோஜன் (மு.வள்ளிபுனம் க.உ.வி), இ.திருமாறன் (மு.குரவில் த.வி)

**மாற்றுவலுவுடையோர் தினம்**

ஆரம்பப்பிரிவு

சு.தம்ஜா (மு.நெத்தலியாறு த.வி), ப.தமிழ்வாணன் (மு.வள்ளிபுனம் க.உ.வி), அ.மீனுஜா (மு.புதுக்குடியிருப்பு றோ.க.வி)

கனிஷ்டபிரிவு

சு.பபிலன் (மு.சுதந்திரபுரம் அ.த.க.பா)

இடைநிலைப்பிரிவு

ஜெ.நிதர்சன் (மு.ஆனந்தபுரம் அ.த.க.பா), து.வதுர் ஷன் (மு.சுதந்திரபுரம் அ.த.க.பா), சி.சிந்துஜன் (மு.உடையார்கட்டு ம.வி)

முற்றும் (42)

## வீதி புனரமைப்பு

காங்கேசன்துறை பொலிஸாரினால் நகுலேஸ்வரத்தில் இருந்து இளவாலைக்கு செல்லும் வீதி இயந்திரத்தின் உதவியுடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதி முன்னர் பற்றைகள் நிறைந்து காணப்பட்ட நிலையில் இதனூடாக பொதுமக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினார்.

இதனையடுத்து காங்கேசன்துறை பொலிஸார் சிரமதானம் மூலம் குறிப்பிட்ட வீதியை துப்புரவு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

## கொக்குவில் பொதுநூலகத்தின் வாசிப்புமாதப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி மாணவர்களுக்கிடையில் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.


இதன்படி தரம் 1,2 மாணவர்களுக்கு சொல்கோர்த்தல் போட்டியும் தரம் 3,4,5 மாணவர்கள் சொல் ஒன்று பொருள் இரண்டு கருத்துப் போட்டியும் தரம் 6,7,8 மாணவர்களுக்கு கதை உருவாக்குதல் போட்டியும் முன்பள்ளி மாணவர்களுக்கான உளவிருத்தி செயற்பாட்டுப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

## சங்கானை பட்டின சபையின் நல்லொழுக்க தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசம் நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தினம் நாளை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை பட்டின சபையின் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.றொட்டரி கழக மக்கள் தொடர்பு இயக்குநர் இ.அனுராஷ், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் தி.சிவதெட்சனா மூர்த்தி, சங்கானை தெற்கு கிராம சேவையாளர் கு.லிதாம்பாள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் பிரிவு வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் அண்மையில் நடத்திய க.பொ.த உயர்தரத்தில் தோற்றிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வின் பதிவுகள்..... (11)

நிதானத்தைக் கடைப்பிடி அதுவே வெற்றியின் முதற்படி
- டெஸ்கார்ட்ஸ்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, th u@live.com
Online : www.thinamurasu.net

## நான்காவது ஆண்டில்...

வணக்கம்.

நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது தினமுரசு நாளிதழ்.

வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் தினமுரசு குடும்பத்தின் நன்றியையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்துகொள்கிறோம்.

எமக்குத் தொழில் கவிதை என்ற பாரதி தொடர்ந்து நாட்டிற்கு உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்கிறான். எமக்குத் தொழில் பத்திரிகைத்துறை என்று சொல்ல வேண்டுமானால், நாம் உண்மையான தரவுகளை தகுந்த ஆதாரங்களுடன் சொந்த விருப்பு உணர்ச்சி ஆவேசங்களைக் கலக்காமல் மக்களுக்குத் தரும் தொழில்முறைப் பத்திரிகையாளர்களாக இருக்கவேண்டும். அப்படித்தான் நமது தமிழ்ப் பத்திரிகைத்துறை இருக்கிறதா என்பதை இத்துறைசார்ந்த ஒவ்வொருவரும் கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கான பத்திரிகைக் கலாசாரத்திலிருந்து பிறழ்ந்து அரசியல் சார்ந்த உணர்ச்சிமைய ஊடகக் கலாசாரத்தையே நமது பத்திரிகைகள் பெரும்போக்காகக் கொண்டுள்ளமை நமக்குத் தெரியும். அதனால்தான் அரச எதிர்ப்புக் கோஷங்களோடு மக்கள்சார்ந்த அக்கறையை முடித்துவிடுவதாக இந்தப் பெரும்பான்மை தமிழ்ப் பத்திரிகை எழுத்துக்கள் இருக்கின்றன.

செய்தி சார்ந்த விடயங்களாக இருந்தாலும், அறிவியல் சார்ந்த விடயங்களாக இருந்தாலும் அல்லது கலைத்துவம் சார்ந்த மகிழ்வூட்டும் விடயங்களாக இருந்தாலும் ஊடகங்களால் கட்டமைக்கப்படுகின்ற அனைத்து வடிவங்களுமே மனிதனுடைய சிந்தனைத் தளத்தை ஆக்கிரமிப்பதை நோக்கமாகக் கொண்டவைதான்.

இந்த ஆக்கிரமிப்பு, மக்களது தேவைகளை மையப்படுத்தி அவர்களை வாழவைப்பதற்கு உதவுவதாக இல்லாமல், சொந்த அரசியல் லாபங்களைப் பெற்றுக்கொள்வதோடு முடிந்து விடுமானால், அது நமது மக்களின் நமது சூழலின் பெருஞ் சோகமல்லாமல் வேறென்ன?

தினமுரசு நாளிதழ் இன்னும் விற்பனையில் சாதனைகள் படைக்காதிருக்கலாம். மக்கள் இதைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள் என்று மிகைப்படுத்திச் சொல்ல முடியாதிருக்கலாம். நாம் எவ்வளவோ நினைத்து அதையெல்லாம் முழுமையாகச் செய்ய-முடியாமல் போயிருக்கலாம்.

ஆனாலும், தினமுரசு தன்னால் முடிந்தவரை யதார்த்த நிலைமைகளையும் நடைமுறைச்சாத்தியமான விஷயங்களையும் மக்களிடம் கொண்டுபோக முயன்றிருக்கிறது. விற்பனைக்காக உணர்ச்சிகர பரபரப்புகளை எழுதவில்லை. மக்களிடமுள்ள அதிருப்திகளையும் கோபத்தையும் விற்றுக் காசாக்க முயலவில்லை. எது நடக்குமோ எது சாத்தியமோ எது மக்களது வாழ்வுக்குத் தேவையோ அதன்பால் நின்றே தினமுரசு செய்திகளைத் தருவதில் உறுதியாயிருந்திருக்கிறது.

இன்னமும் நாம் செய்யவேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்ற பிரமிப்பும் கூடவே வந்திருக்கிறது. அந்த வகையில் பார்க்கையில், தினமுரசின் வளர்ச்சியும் விளைச்சலும் நம் மனதுக்கு நிறைவுதருவதாகவே இருக்கிறது. வயிற்றில் பசியோடு வயலில் சாய்ந்து கிடக்கும் கதிர் பார்த்துச் சிரிக்கும் விவசாயியின் நிறைவு.

அந்த நிறைவோடும் பசியோடும் தொடரும் நம் பயணம்.

பயணத்தில் இணையும் உங்களனைவருக்கும் தினமுரசு குடும்பத்தின் வாழ்த்துக்கள்.

- ஆசிரியர்

# சட்ட மீறலை நிரூபித்தால் நிர்வாணமாக நடக்கத்தயார்

## -பிரதியமைச்சர் பிரேம்லால் ஜயசேகர-

(கொழும்பு)

தோட்ட கம்பனிகளுக்கு உரிமையான எந்தவொரு காணியையாவது தான் சட்டத்தை மீறிய வகையில் பெற்றுக் கொண்டதாக யாராவது நிரூ பித்தால் இரத்தினபுரி நகரில் நிர்வாணமாக நடப்பேன் என்று பிரதியமைச்சர் பிரேம்லால் ஜயசேகர தெரிவித் துள்ளார்.

நிவித்திகலவிலுள்ள ஒரு தோட்டத்திலிருந்து ஆக்கிரமிப்பு மூலம் இவர் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் 3 ஏக்கர் நிலத்தை மீட்டெடுக்க விசேட அதிரடிப் பொலிஸார் அனுப்பப் பட்டதென வந்த ஊடக செய்திகள் பற்றி கருத்துத் தெரிவித்த போதே பிரதியமைச்சர் ஜயசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தன்னை கேவலப்படுத்த முயல்வோர் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

தோட்டக் காணிகளை அத்துமீறி கைப்பற்றல் தொடர்பாக நிவித்திகல பிரதேச செயலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் தனக்கு எதிராக குற்றச்சாட்டுகளை கூறுவோரை அவர் சபித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மாங்காய் உண்ட மாணவிகள் மருத்துவமனையில் அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள் 7 பேர் நேற்று திடீர் சுகயீனமுற்றுள்ளனர். இவர்கள் ஆரையம்பதி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தின் விடுதியில் தங்கியிருந்த மாணவிகளில் 7 பேரே திடீர் சுகயீனமுற்றுள்ளனர்.

இவர்கள் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் ஐந்து மாணவிகள் வைத்திய சாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர். எனினும் இரண்டு மாணவிகள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக ஆரையம்பதி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பாடசாலையின் விடுதியில் 77 மாணவிகள் தங்கியிருக்கின்றனர். இவர்களில் 15 மாணவிகளுக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளது. இதில் ஒரு மாணவி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

வாந்தி மற்றும் வயிற்றோட்டம் போன்ற திடீர் நோய்கள் குறித்த மாணவிகளிடம் காணப்பட்ட மையினாலேயே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து அங்கு சென்ற மட்டக்களப்பு சுகாதார அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

எனினும் இந்த மாணவிகளுக்கு உணவு ஒவ்வாமையினால் திடீர் சுகயீனம் ஏற்பட வில்லை என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி கூறுகையில், இந்தச் சம்பவத்தை கேள்வியுற்று பாடசாலைக்கு சென்று விசாரணை செய்ததுடன் குறிப்பிட்ட மாணவிகள் சில மாங்காய்களை உட்கொண்டுள்ளனர். இதனால் ஒரு சில மாணவிகளுக்குத் திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளது. எனினும் மாணவிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றார்.

# வெளிநாட்டிலிருந்து வந்தோரில் 40 வீதமானவர்களுக்கு "எயிட்ஸ்"

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களில் 40 வீதமானவர்கள் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர்கள் என்று தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் தலைவர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

33 வீதமானோர் ஆண்களும் 7 வீதமான பெண்களும் இவ்வாறு எச்.ஐ.வி. தொற்றுக் குள்ளாகியுள்ளனர். சிகிச்சைக்காக வருவோர் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் இவ்விடயம் தெரிய வந்துள்ளது. இவ்வாறு பாதிக் கப்பட்டவர்களில் தொழில் நிமித் தம் வெளிநாடு சென்றவர்கள் மற்றும் உல்லாசப்பிரயாணம் மேற்கொண்டவர்களும் உள்ளடங்கு கின்றனர்.

எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக சந்தேகமுள்ளவர்கள் இரத்த பரிசோதனை மூலம் அதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். இரத்த பரிசோதனை மூலமாக மட்டுமே அதனை அறிய முடியும் என்றும் அவர் தெரிவித்தார். உத்தியோகபூர்வ தரவுகளின் படி தற்போது இலங்கையில் 1739 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக் கப்பட்டுள்ளனர். என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள், ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவோர், போதைப்பொருள் பாவனையாளர்கள், சிறைக் கைதிகள், கடலோரப் பிரதேசங்களில் தமது நேரங்களை அதிகமாக செலவிடும் சிறுவர்கள் ஆகியோர் அதிகமாக எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகின்றனர். அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கு வதனூடாக நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபடவேண்டாம் என தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தந்திச்சேவைகள் இன்று முதல் நிறுத்தம்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள தபால் நிலையங்களில் இன்று முதல் தந்திச் சேவை (டெலிகிராம்) நிறுத்தப்பட்டுள்ளதென தபால் மாஅதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தந்திச் சேவையை நிறுத் துவது தொடர்பாக தபால் திணைக்களம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் உடன்பாடொன்று காணப்பட்டுள்ளன.

அதற்கமைய தந்திச்சேவை முற்றுமுழுவதுமாக நிறுத்தப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மின்சார விபத்துக்களை தடுக்க மக்களை தெளிவூட்டும் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடத்தில் மாத்திரம் மின்சாரம் தாக்கி சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாதுகாப்பான முறையில் மின்சாரத்தை பயன்படுத்துவது தொடர்பில் பொது மக்களை தெளிவூட்டும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

மின்சாரத்தினால் ஏற்படும் விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு பொலிஸார் மற்றும் மின்சார சபையுடன் இணைந்து இக்குழு விசேட திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது இந்தத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு எண்ணியுள்ளோம்.

2016 ஆம் ஆண்டளவில் வருடாந்தம் மின்சாரத்தினால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கையை 50 ஆக குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் மின்சாரத்தினால் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை, கடந்த 5 வருடங்களாக மின்சாரத்தினால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பில் பொலிஸாருடன் இணைந்து விசேட ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இது தொடர்பில் புதிய சட்டங்களும் அமுல்படுத்தப்படவுள்ளன.


அடுத்த மூன்றாண்டு காலப் பகுதியில் மின் சாரத்தினால் ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்கான பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒரு பேனாவும், பெரும் கனவுகளும்

டொன் பிந்நோக்

## கட்டுரையாசிரியரைப் பற்றியதோர் சிறிய அறிமுகம்:

இக்கட்டுரையாசிரியர், டொன் பிந்நோக், தென்னாபிரிக்காவின் கேப் டவுன் நகரில் தன்னுடைய மனைவியும், பிரபல நாவலாசிரியருமான பாட்ரிஷியா ஸ்கான்ஸ்டீனுடன் வசிக்கிறார். இவர் ஒரு பயணக் கட்டுரையாளர், பல புதிய இடங்களுக்குச் செல்வதும், புதிய மனிதர்களைச் சந்திப்பதும், ஆபிரிக்க காடுகளில் வசிக்கும் புலிகளை புகைப்படமெடுப்பதும் இவரது விருப்பமான பொழுதுபோக்காகும். ரீடர்ஸ் டைஜஸ்ட்டில் பிரசுரமாகியிருந்த இவரது கட்டுரையின் மொழிபெயர்ப்பு இது.



**1999ஆம்** ஆண்டின் மத்தியில், தெளிந்த வானத்துடன் கூடிய ஆபிரிக்காவிற்கே உரித்தான வெம்மையான ஒரு தினம். எதியோப்பியாவிலிருக்கக் கூடிய ஒரு சிறு கிராமமொன்றின் குறுக்கே ஓடும் நதியொன்றின் மீதான பாலத்தில் நின்று கொண்டிருந்தபோது, கண்கவரும் பல வண்ண நூலிழைகளால் பின்னப்பட்டிருந்த ஒரு ப்ரேஸ் லெட்டுடன் ஒரு சிறுவன் என்னை அணுகினான்.

என் பெயர், மாரிஷெட் டையர்ஸ், என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு, நான் உங்களுக்கு எதியோப்பியாவின் நிறங்களைப் பரிசளிக்கிறேன், பதிலாக எனக்கு பணமெதுவும் வேண்டாம், உங்களுடைய நட்பு மட்டுமே போதும் என்று கூறிக் கொண்டே, என்னுடைய கையில் அந்த அழகிய ப்ரேஸ்லெட்டை அணிவித்தான்.

டாணா ஏரியிலிருந்து சீறிப் பாய்ந்து கொண்டிருந்த நீல நைல் நதியின் மேலமைந்திருந்த அப்பாலம், பாஹர் தார் என்ற இடத்தில் அமைந்திருந்தது. அச்சிறுவன் மாரிஷெட் அப்போதுதான் அவனுடைய பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான், ஆங்கிலப் பாடங்களை பயிற்சி செய்ய வேண்டியிருப்பதாகக் கூறினான்.

பச்சை, மஞ்சள், சிவப்பு இழைகளால் மிக நெருக்கமாகவும், நேர்த்தியாகவும் பின்னப்பட்டிருந்த அந்த ஆபரணத்தையும், வெள்ளைச் சிரிப்புமாய், தேனின் நிறத்தோடு, அடர்த்தியான கறுப்பு நிற முடியுடைய அச்சிறுவனையும் நான் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தேன். அவனுடைய நாகரிகம்தான் எத்தனை பழையது மற்றும் முன்னேறியது!! ஐரோப்பியர்கள் வெறும் புற்களையும், களி மண்ணையும் வைத்துக் கொண்டு கட்டடம் கட்டிக் கொண்டிருந்த காலத்திலேயே, இவர்கள் கற்களாலான அரண்மனைகளையும், க்ரானைட்டினால சிலைகளையும் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

இந்நிறங்கள் எவற்றைப் பிரதிபலிக்கின்றன?, என்று கேட்டேன்.

பச்சை இயற்கை வனப்புடன் கூடிய சமவெளியையும், மஞ்சள் தேவாலயத்தையும், சிவப்பு...என்று யோசித்தவன், நினைவில்லை, நீங்களே தெரிந்து கொள்வீர்கள் பிறகு என்று புன்னகைத்தான்.

சிறு தயக்கத்திற்குப் பிறகு, உங்களால் எனக்கொரு பேனா தர முடியுமா?? என்று கேட்டான்.

பொதுவாக பணம், இன்னும் பலவற்றைக் கேட்கும் ஆபிரிக்கக் குழந்தைகளைப் பார்த்தே பழக்கப்பட்ட நான், பேனா மட்டும் போதுமா? என்று ஆச்சர்யத்துடன் வினவினேன்.

ஆம், போதும். பேனா இல்லையென்றால் எங்களைப் பள்ளியில் அனுமதிப்பதில்லை. என்னுடைய பேனா இன்று தீர்ந்துவிட்டது, இன்னொன்றை வாங்குமளவிற்கு என்னுடைய குடும்பத்திற்கு வசதியில்லை. நான் பள்ளிக்குச் செல்வதை மிகவும் விரும்புகிறேன். பிற்காலத்தில் ஒரு மருத்துவராகவோ அல்லது ஒரு கணக்காளராகவோ வர விரும்புகிறேன், அதற்கு நான் கல்வி கற்றேயாக வேண்டும். உங்களால் எனக்கொரு பேனா தர முடியுமா??

நான் பொதுவாக பயணங்களின் போது மலிவான பேனாக்கள் நிறைய வைத்திருப்பேன். அதனால் அவன் கைநிறைய பேனாக்களை அள்ளிக் கொடுத்தேன். அப்பேனாக்களைப் பெற்றுக் கொண்டதும் அவன் முகத்தில் விரிந்த அப்புன்னகைக்கு முன்னர் அப்பேனாக்கள் எனக்கு ஒரு பொருட்டே இல்லை என எனக்குத் தோன்றியது.

உங்கள் முகவரியைக் கொடுங்கள், உங்களுக்குக் கடிதமெழுதுகிறேன், என்றான்.

சரி, ஆனால் நீ ஏன் உன் வயதையொத்த என் பெண், ரோமனிக்கு கடிதமெழுதக் கூடாது? என்னைவிட அவளுடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய சுவாரஸ்யமான விஷயங்கள் உன்னிடம் அதிகமிருக்குமென எண்ணுகிறேன், என்றேன்.

நான் கேப் டவுன் திரும்பிய சில தினங்களுக்குள்ளாகவே, கண்ணைப் பறிக்கும் தபால்முத்திரைகளைத் தாங்கிய ஒரு கடிதமொன்று மாரிஷெட்டிடமிருந்து வந்தது.

என்னுடைய இனிய சினேகிதிக்கு, என்று துவங்கிய, எத்தியோப்பியச் சாயலுடனான அழகிய ஆங்கில நடையில் அக்கடிதத்தில், தன்னுடைய குடும்பம், பாஹர் தார் கிராமம், தன்னுடைய நம்பிக்கைகள் மற்றும் இலட்சியங்கள் என நிறையப் பேசியிருந்தான். ரோமானிக்கு புதிய சினேகிதன் கிடைத்த அளவிலா மகிழ்ச்சியுடன் திரும்பக் கடிதமெழுதினாள்.

தொடர்வதும் பிறகு இடை நிற்பதுவுமாகக் துவங்கிய இவ்விருவருக்குமிடையேயான கடிதப் போக்குவரத்து பல வருடங்களுக்கு நீடித்தது. பிறகு அவளுடைய ஒரு கடிதத்திற்கு பதிலே வராமற்போனது. பள்ளிப் படிப்பு முடிந்துவிட்டதா? அருகிலுள்ள பண்ணையில் ஏதும் வேலை செய்து கொண்டிருப்பானோ? அல்லது வசிப்பிடம் அருகே தபால்நிலையம் ஏதும் இல்லாதிருக்கலாம், அல்லது மற்ற ஆபிரிக்கச் சிறுவர்களைப் போல அடிஸ் அபாபாவில் இவனும் பிச்சையெடுக்கச் சென்றிருப்பானோ என பலவிதமான எண்ண ஓட்டங்கள், சுய சமாதானங்கள்.

மெதுவாக, கால ஓட்டத்தில், மாரிஷெட், எங்களுடைய கடந்தகாலத்தில் கரைந்து விட்டிருந்தான்.

2011, ஒக்ரோபர் மாதம், தென் ஆபிரிக்காவின், ∴ப்ரீ ஸ்டேன் ப்ரொவின்ஸின் ஊடாகப் பிரயாணித்துக் கொண்டிருந்தபோது, என்னுடைய அலைபேசி அழைத்தது. நானே வண்டியோட்டிக் கொண்டிருந்தபடியால் எடுக்க வேண்டாமென நினைத்து, பிறகு தொடந்து அழைத்துக் கொண்டேயிருந்தமையால், அழைப்பை எடுத்தேன்.

மறுமுனையில் ஹலோ என்ற குரல், நீங்கள் டொன் பிந்நோக்தானா? என்று கேட்டது.

ஆம், நீங்கள் யார்?

நான் மாரிஷெட் டையர்ஸ், எத்தியோப்பியாவின் பாஹர் தார் பாலத்தருகே நீங்கள் சந்தித்த சிறுவன், நினைவிருக்கிறதா?

ஓஹ், நன்றாகவே.

உங்களுடைய இணையதளத்தில் உங்களது அலைபேசி எண் கிடைத்தது என்று சொன்னவன் எனது மின்னஞ்சல் முகவரியைக் கேட்டான்.

அங்கு அவ்வளவாக அலை பேசி இணைப்பு சரியாக இல்லாதபடியால், நான் உங்களுக்கு மின்னஞ்சல் செய்கிறேன் என்று அவன் சொன்னவுடன் தொடர்பு அறுந்து போனது. எனக்கு மிகுந்த ஆச்சரியம்! எப்படி அவ்வளவு ஏழ்மை நிலையிலிருந்த ஒரு சிறுவனுக்கு இன்று இணையதளங்களையும், செல்போன்களையும் பயன்படுத்துமளவிற்கு முன்னேற்றம் கிட்டியது?

சில வாரங்களுக்கு அவனிடமிருந்து மின்னஞ்சல் ஏதும் வரவில்லை. பிறகு ஒன்று வந்தது....

அன்பிற்குரிய பிந்நோக்,


உங்களிடம் மீண்டும் பேச முடிந்ததில் மிக்க மகிழ்ச்சி. பல முறை உங்களை அலைபேசியின் மூலமாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ள முயற்சி செய்து பலனளிக்கவில்லை. அன்றைய தினம் உங்களுடன் பேச முடியுமென்றே நினைக்கவில்லை, அந்நாளை ஆசீர்வதிக்கப்பட்ட தினமாக உணர்கிறேன். எப்படி இருக்கிறீர்கள்? நீண்ட காலமாயிற்று...

அந்த மின்னஞ்சலூடாக, மாரிஷெட், எப்படியோ ஹொலண்டிற்குச் சென்றுவிட்டதும், அங்கு சில காரணங்களால் கல்வி கற்க இயலாமற்போனதும், பிறகு லண்டனில் கடந்த நான்கு வருடங்களாக கல்வி கற்று வருவதும் தெரியவந்தது. மின்னஞ்சல் கடைசியில் இவ்வாறு முடிந்தது..

...நான் தற்போது ப்ருநெல் பல்கலைக்கழகத்தில் பட்டய கணக்காளருக்குப் படித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அளித்த பேனாக்களுக்கு நன்றி. தொடர்பிலிருங்கள். உங்களுக்கும் உமது குடும்பத்தாருக்கும் என்னுடைய வணக்கங்கள்.

மீண்டும் வருக!

(நன்றி: ரீடர்ஸ் டைஜஸ்ட்)



# ரயிலின் மிதிபலகையில் பயணித்த கொக்குவில் இளைஞர் மரணம்

கொழும்பு கோட்டையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் பயணித்த இளைஞர் ஒருவர், அநுராதபுரம் புதிய ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள மல்வத்து ஓயா கருத்த பாலத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 20 வயதான இளைஞனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் இடம் பெற் றுள்ளது. ரயிலின் மிதிபலகையில் பயணம் செய்தபோது குறித்த இளைஞன் பாலத்தில் மோதியமை தெரியவந்துள்ளது.

# படையினருக்கு அனைவரும் நன்றி பாராட்ட வேண்டும்



படையினருக்கு நன்றி பாராட்ட வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித்ததேரர் தெரிவித்துள்ளார். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் படையினர் அரிய சேவைகளை ஆற்றியுள்ளனர்.

1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இராணுவம் அன்றிலிருந்து இன்று வரை நாட்டின் அபிவிருத்திக்காக பாடுபட்டுள்ளது.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த படையினருக்கு நாம் அனைவரும் நன்றிக்கடன் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.இராணுவப் படை ஆரம்பிக்கப்பட்டு 64 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# “தேசத்துக்கு மகுடம்” நடமாடும் சேவையை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தத் திட்டம்

தேசத்துக்கு மகுடம் நடமாடும் சேவையை, 2014ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற திவிநெகும அபிவிருத்தித் திட்டத்தின் ஐந்தாம் கட்டம் தொடர்பாக, மாவட்ட ஒழுங்கமைப்பு அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகளை தெளிவுபடுத்தும் கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது கேகாலை, குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தேசத்துக்கு மகுடம் நடமாடும் சேவை வேலைத் திட்டமானது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2014 தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்காக 3 மாவட்டங்களில், 2731 கிராம சேவையாளர் பிரிவுகளில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 2149 நடமாடும் சேவை திட்டங்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு காணப்படுகிறது.எனவே இதனை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது. விவசாயத்தை அபிவிருத்தி செய்ய மட்டுமன்றி, குடிநீரை பாதுகாப்பதற்காக குளங்கள் அமைத்தல், நீர் நிலைகளை உருவாக்குதல் மற்றும் நீர் ஊற்றுக்களை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. கிராமத்துக்கு ஒரு அபிவிருத்தித் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் மக்களது தேவைகளை அடையாளங்கண்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் திவிநெகும திணைக்களம் நிறுவப்பட்டு அதனூடாக 5 நிறுவனங்களுடன் இணைந்து ஏழ்மையை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் திரவப்பால், சின்ன வெங்காயம், சோயா, பயறு, மிளகாய் ஆகியவற்றை நாட்டிலேயே உற்பத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

.திவிநெகும திட்டத்தின் ஐந்தாம் கட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதுடன் 10.11 வடக்கு நோக்கி மரம் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்களான ஹேமா தர்மசேன, சாந்த பண்டார, மற்றும் பிரியந்த மாயாதுன்ன ஆகியோர் உட்படப் பல சிரேஷ்ட அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# சந்திரிக்காவுடன் சேர்ந்து ரணில் சதித் திட்டம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் திட்டமொன்றை ரணில் விக்ரமசிங்க செயற்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனைத் கூறியுள்ளார். அப்பாவின் பெயர் தெரியாத சிலரிடம் துஷ்டத்தனமான திட்டங்கள் இருக்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சியை பலமிழக்கச்செய்வதே அவர்களின் திட்டம்.சந்திரிக்கா குமாரதுங்கவுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தை பெறும் திட்டமும் அவர்களுக்கு உள்ளது. இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு தாவிச் செல்லவே தருணம் பார்த்துக் காத்திருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பரஸ்பர நல்லிணக்கம் மூலம் நிரந்தரத் தீர்வுகாண முடியும்



சுயாட்சி அதிகாரம், தேசிய ஐக்கியம் ஆகிய இரண்டு முக்கிய காரணங்களையும் சமனிலைப்படுத்தி பிரதான இன சமூகங்களுக்கு இடையில் பரஸ்பர நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்குதன் மூலம் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்.

மாகாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இனப் பிரிவினை வாதத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் டாக்டர் ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் நடைபெற்ற மூன்று மாகாணங்களிலும் தேசியத்தை முதன்மைக் கருப்பொருளாகக் கொண்டு பிரசாரம் செய்யப்பட்டது. வடக்கில் அரசாங்கத்திற்கு எதிராக 80 வீதமான வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில், வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவாக 60இற்கும் மேற்பட்ட வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர். இனவாத அடிப்படையிலான தேர்தல் முடிவுகள் ஆபத்தான நிலைமையாகவே கருதப்பட வேண்டும். தேர்தல் முடிவுகள் தேசிய நல்லிணக்கத்தை மேலும் மோசமான நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது உள்ளக ரீதியாக பிளவடைந்த சமூகங்களின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தையோ, நாட்டின் சுபீட்சத்தையோ உறுதிப்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்கில் எதிர்க்கட்சிகளின் பலவீனம் அரசாங்கத்திற்கு பெரும பலமாக அமைந்துள்ளது என்றார்.

# அரசியலமைப்பின் ஊடாக வடக்கின் அபிவிருத்திப் பணி

(கொழும்பு)

அரசியலமைப்பின் ஊடாக அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்கத் தயாரென முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று வடக்கில் அரசாங்கத்துடன் தொடர்புபடாத மற்றுமொரு குழுவிற்கு வடக்கில் ஜனநாயக ரீதியில் நிர்வாக உரிமையை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு முன்னர் இவ்வாறு இருக்கவில்லை. எனவே வடக்கில் உள்ள நிர்வாகத்திற்கும் அரசியலமைப்பின் பிரகாரம் தெற்கில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களைப் போன்று வடக்கிற்கும் வழங்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது. ஆனால் அது அரசியலமைப்பிற்கு ஏற்ப இடம்பெற வேண்டும். மீண்டும் புலிகள் உருவாக்கப்பட்டு ஜனநாயகத்தை இல்லாது செய்வதற்கு எந்தவொரு அரசாங்கமும் இடமளிக்காது என்று நான் நினைக்கிறேன். அதை நிறுத்துவதற்கு எமக்கு அதிகாரம் இருக்கின்றது. இந்த நாட்டில் உள்ள அனைத்து பிரஜைகளுக்கும் வழங்கப்படுகின்ற சலுகைகளையும் வட பகுதி மக்களுக்கு வழங்கும் உரிமை எமக்குள்ளது. அதேபோன்று கடந்த காலங்களிலும் அதனை வழங்கியுள்ளோம் என்றார்.

# சினிமா விருது வழங்கும் விழா





(கொழும்பு)


இலங்கை சினிமாத்துறையில் தடம்பதித்துள்ள பல்வேறு கலைஞர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இலங்கையில் வெளிவந்த தமிழ்த் திரைப்படமான 'இனி அவன்' சிறந்த திரைப்படம், நடிகர், நடிகை, இயக்குனர் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வசப்படுத்தியுள்ளது.

சிறந்த திரைப்படம் - இனி அவன் சிறந்த நடிகை - நிரஞ்சனி சண்முகராஜா (இனி அவன்)

சிறந்த நடிகர்களாக - தர்ஷன் தர்மராஜ் (இனி அவன்), புத்திக்க ஜயரத்ன (சௌசுரு மாருவ) சிறந்த துணை நடிகர் - ராஜா கணேசன் (இனி அவன்) சிறந்த திரைக்கதை மற்றும் இயக்குனர் - அசோக்க ஹந்தகம (இனி அவன்) சிறந்த குறுந் திரைப்படம் - இல்ஹாம் குசைன் (சாவோஸ்) சிறந்த பாடகியாக - நிரோஷா விராஜினி சிறந்த குழந்தை நட்சத்திரம் - கே.எம்.பவித்ர (மாதா) சிறந்த துணை நடிகை -வீனா ஜயகொடி (குசபபா) சிறந்த திரைப்படம் - சமனல சந்திவனிய சிறந்த இயக்குனர் - உதய தர்மவர்த்தன மிகப் பிரபலமான நடிகை - பூஜா உமாசங்கர் மிகப் பிரபலமான நடிகர் - ரோஷான் ரணவன தெரிவாகியுள்ளனர்.

# ஐ.தே.க. எதிர்காலம் குறித்து யோசனைகள் பரிசீலிப்பு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்காலம் குறித்து பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன அந்த யோசனைகள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்பின்னர் ரணில் விக்கிரமசிங்க யோசனைகள் தொடர்பான தகவலை வெளியிட்டார் கட்சியின் எதிர்கால யோசனைகள் தொடர்பில் இந்த வார இறுதியில் தீர்மானிக்கப்படும் என்றும் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியில் ஆலோசனை குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த ஆலோசனைக்குழுவுக்கும் ஐக்கியதேசியக்கட்சிக்கும் இடையில் மத்தியஸ்தராக அநுராதபுரத்தின் வணக்கத்துக்குரிய கிராபெ ஆனந்த தேரர் செயற்படவுள்ளதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

# ஒய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் பலாபலன்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் பலாபலன்கள் அதிகரிக்கப் பட்டுள்ளதாக நிதியத்தின் யாழ். மாவட்டக்கிளை அறிவித்துள்ளது.


இதன்படி அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் இறப்பு மானியம், வைத்தியசாலை கொடுப்பனவு, கண் சிகிச்சைக்கான கொடுப்பனவு, புலமைப் பரிசில் தொகை, சத்திரசிகிச்சை கொடுப்பனவு, கடன்கொடுப்பனவு என்பனவே அதிகரிக்கப்பட்டுள்ளன.

நிதி அங்கத்தவர்களின் மாதாந்த கட்டணம் 20 ரூபாவில் இருந்து 50 ரூபாவாகவும் வைத்தியசாலை கொடுப்பனவு 200 ரூபாவில் இருந்து 250 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் கண் சிகிச்சையின் போது ஒரு கண்ணுக்கு 2500 ரூபா வீதம் வழங்கும் தொகை 4000 ரூபாவாகவும் பல்கலைக் கழகம் செல்லும் பிள்ளை ஒன்றுக்கு 3000 ரூபா வீதம் வழங்கும் தொகை 5000 ரூபாவாகவும் கடன் 10 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் சத்திரசிகிச்சைக்காக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீர் குழாய்கள் திருட்டு சிரமத்தில் ஊழியர்கள்



(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட மல்லாவி பொதுச் சந்தைப்பகுதிலுள்ள மலசல கூடத்தின் தண்ணீர் குழாய்களை திருடர்கள் களவாடிச்சென்றுள்ளதால் மலசல கூடத்தை சுத்தப்படுத்துவதற்கு சுகாதார ஊழியர்கள் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக் கப்படுகிறது.

சந்தை வளாகத்திலுள்ள இம்மலசலகூடம் வியாபாரிகளாலும் நுகர்வோராலும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் அண்மையில் மலசல கூடத்திற்கு வெளியிலுள்ள தொட்டியில் நீர் நிறைக்கும் இருகுழாய் கள் திருடர்களால் களவாடப்பட் டுள்ளன.

இதனால் தண்ணீர் நிறைத்து மலசலகூடத்தை சுத்தப்படுத்த முடியாது ஊழியர்கள் சிரமப்படு வதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய விஷமத்தனமான செயற்பாடுகளால் பொதுமக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (140)

# முரசின் இன்றைய பலன்



[01.10.2013 செவ்வாய்க்கிழமை]

விஜய வருஷம் புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி. ஆயிலியம் நட்சத்திரம் பி.ப 1.28 வரை பின்மகம், துவாதசிதிதி ,சித்தம்யோகம் இராகுகாலம 03.02- 04.32 வரை. சுபநேரம 10.32- 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கிளினிக் கொப்பி, அடையாள அட்டை முதலியன தவறிவிடல், விளையாட்டுத்துறையில் பதவிகளுக்காக தெரிவு செய்யப்படல், பணவரவு. |
| ரிஷபம் | திருட்டு நபர் பிழபட்டதால் இழப்பு மீண்டும் கிடைத்தல், 'விசா" பிரச்சினையால் தாயகம் திரும்புதல், நோய் மாறும் அறிகுறி. |
| மிதுனம் | சட்ட விரோத பொருட்களைக் கொண்டு செல்ல முனைவதால் கைதாகும் நிலை, பிள்ளைகளின் நடத்தையால் பெற்றோருக்கு மனக்கவலை. |
| கடகம் | பக்கச்சார்பாக நடந்து கொண்டதால் மனவாட்டம், கௌரவபதவி பெற சிபார்சு செய்யப்படல், தானதர்மச் சிந்தனை மேலோங்குதல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டினால் பணவரவு. |
| சிம்மம் | சகஉத்தியோகத்தரால் பதவிக்கு கேடு சூழல், தவறிய ஆவணம் மீண்டும் கிடைத்தல், பணவரவு திருப்திதரல். |
| கன்னி | பயணம் இடைத்தங்கல்நாட்டில்சேர்த்துவிடல், தொழில் நிமித்தம் பிரிவு ஏற்படும், காசோலைகள் பணமுடையினால் திரும்பல். |
| துலாம் | பாதுகாப்பற்ற நிலைமையினால் திருட்டுப் போகும் அபாயம், வாக்குவாதத்தினால் பொன்னான சந்தர்ப்பம் இழந்து போதல். |
| விருச்சிகம் | கொள்வனவு செய்யுமுன் நம்பகத்தன்மையைப் பாருங்கள், பரீட்சைப பெறுபேறு மகிழ்வைத் தரும், புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல். |
| தனுசு | வெளியூர் உறவினரின் வருகையால் மகிழ்வு, சொத்துப்பிரச்சினை சுமுகமடைதல், நோய் குணமடைந்து தேகசுகம் மேம்படையும். |
| மகரம் | பயண ஏற்பாடு இழுபடும் நிலை, பிரிவுத்துயரின் மத்தியில் விவாக முயற்சி நிறைவேறல். சமாதானத்தை நிலைநாட்டி சச்சரவினைத் தீர்த்து வைத்தல். |
| கும்பம் | சம்பள அதிகரிப்பு கேட்டு ரகளையில் ஈடுபடல், பிள்ளைகளீன் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் செல்லும் யோகம் கிட்டுதல். |
| மீனம் | வெளியூர் பயணம் இடையில் நின்றுவிடல், கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை ஏற்படல், பெற்றோரின் தேகநலம் திருப்திதரல். |

# வீதி புனரமைக்கப்படுமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியானது நீண்டகாலமாகப் புனரமைப்பின்றிச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக பலராலும் தெரிவிக் கப்படுகின்றது.

அன்றாடம் இந்த வீதியைப் பல்வேறு தரப்பினரும் பயன்படுத்தி வரும் நிலையில் இவ்வாறு குண்டும் குழியுமான நிலையில் காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளும் பாதசாரிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கு வதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரிலுள்ள பல பிரதான வீதிகள் மற்றும் சிறுவீதிகள் கூட சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வீதியானது புனரமைப்பினறிக் காணப்படுவது போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு விசனத்தை ஏற்படுத்துவதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, பயணிகளின் நல னைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியினைப் புனரமைப்பதற்கு முன்வரவேண்டும் எனப் பல தரப்பின ரும் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

**01. பதவி :- பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)**

பதவி குறியீட்டு எண் :- 101/8

சம்பள அளவுத் திட்டம் :- 11200 - 14100 / 140 x 10 - 150 x10

*(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66 /2006 இன் படி)*

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

பதவிக்கான தகைமைகள்

(அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்ட முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

*அல்லது*

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருடகால அனுபவம்/ க.பொ.த உயர்தரப்பத்திரப்பரீட்சையில் 03 பாடங் களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத் தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 06 வருட சேவையாற்றிய அனுபவம்.

வயதெல்லை 21-45 *(சங்கப்பணியாளர்களுக்கு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.)*

**02 பதவி - கணக்காளர் (நிரந்தரம்)**

பதவிக்குறியீட்டு எண் 104/10

சம்பளஅளவுத்திட்டம் 10700-13200 / 120x10-130x10

*(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66 /2006 இன்படி)*

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

**பதவிகளுக்கான தகைமைகள்**

(அ) கூட்டுறவுப்பணியாளர் 11ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ கணக்காளர் அல்லது கணக்கு இலிகிதர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம. அல்லது 12 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/ கணக்காளர் அல்லது கணக்கு இலிகிதர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன், மேற்பார்வைத் தரத்தில் அங்கீகரிக் கபபட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு / கணக் காய்வு வேலைகளில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்/ ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் இடைநிலை பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத் தில் மேற்பார்வை தரக் கணக்காய்வு பதவியில் 04 வருட அனுபவம்.

*அல்லது*

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரசித்தி/ கூட்டுற வுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி. அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டு கால அனுபவம்.

*அல்லது*

க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காளர் துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

வயதெல்லை 18-45

*(சங்கப்பணியாளர்களுக்கு கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது)*

**நிபந்தனைகள்**

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) பிணைப்பணம் -சங்கத்தால் கோரப்படும் உரொக்கப் பிணை ஆதனப்பிணை செலுத்தவேண்டும். பதவி நிரந்தர மானது. இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(இ) விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான் றிதழ், பிறப்புச்சான்றிதழ் மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ் களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும். விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

மேற்குறித்த பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும் விண்ணப் பப்படிவங்களை சுயமாகத் தயாரித்து 'தலைவர் பளை- பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் A-9 வீதி பளை 'எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் எதிர்வரும் 15.10.213 இற்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் குறிப்பிடல் வேண்டும்.

*க.இராசதுரை தலைவர்*
*பளை பனை, தென்னை வள*
*அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம்*

R/319.

# இளவாலை ஹென்றிஸ், தெல்லிப்பளை மகாஜனா சம்பியன்


இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாவட்ட கால்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

சமபோஷ நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டது. இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், பருத்தித்துறை தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதின. அத்துடன் லீக் போட்டியில் அடைந்த தோல்விக்குப் பழிதீர்க்கும் வகையில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி முனைப்புடன் செயற்பட்டது. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முற்பாதி ஆட்டத்தின் இறுதி வேளையில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டத்தில் இருஅணிகளும் கோலைப் பெற்றுக் கொள்ள முனைப்புடன் செயற்பட்டன. குறிப்பாக யாழ். மத்திய கல்லூரி சிறப்பான பந்துப் பரிமாற்றத்துடன் செயற்பட்டது. இருப்பினும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதன் மூலம் தேசிய மட்டப் போட்டிக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெண்களுக்கான இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், குருநகர் சென். ஜேம்ஸ் அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.


ஏற்கனவே, நேற்று முன்தினம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற இளவாலை கன்னியர் மடம் வித்தியாலய அணியுடன் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி, இறுதி ஆட்டத்தில் மோதின. இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி வீராங்கனைகள் சிறப்பான முறையில் ஆடியதுடன் எதிரணிக்கு பெரும் சவாலை ஏற்படுத்தினர். இறுதியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டிக்கு நடுவர்களாக யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தைச் சேர்ந்தோர் கடமையாற்றினர்.

வெற்றி பெற்ற அணிகளுக்கான கிண்ணத்தை யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவரும், யாழ். மாவட்ட மத்தியஸ்தர் சங்கத் துணைத் தலைவருமான சுரேன் வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)


தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீராங்கனைகள்



# சர்வதேச விளையாட்டுப் போட்டிக்கு கிளிநொச்சி வீராங்கனை தகுதி



(கிளிநொச்சி)

இந்தியாவில் நடைபெறவுள்ள உலக சமாதானத்திற்கும், ஐக்கியத்திற்குமான 8ஆவது சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள இலங்கை முன்னோடிக் குழாமில் முதற் தெரிவு அணியில் கிளிநொச்சி மகா-தேவா ஆசிரம சைவ சிறுவர் இல்ல ஜூடோ வீராங்கனை ரவீந்திரன் சுஜீபா இடம்பிடித்துள்ளார்.

சமாதானாத்திற்கும், ஐக்கியத்திற்குமான எட்டாவது சர்வதேச விளையாட்டு போட்டி இந்த மாதம் 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை லக்னோவில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள 16 வயதிற்குட்பட்ட இலங்கை ஜூடோ வீர, வீராங்கனைகள் திறன் காண் போட்டிகளின் அடிப்படையில் 56 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஜூடோ சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த முன்னோடிக் குழாமில் கிளிநொச்சி மகாதேவா சைவ சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ரவீந்திரன் சுஜீபா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான 40 கிலோ கிராமிற்கும், 44 கிலோ கிராமிற்கு இடைப்பட்ட பிரிவிலேயே தெரிவாகியுள்ளார்.

இந்தக் குழாமில் இடம்பெற்ள்ள 56 வீர, வீராங்கனைகளில் இறுதியாக 28 வீர,வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கான இறுதித் தேர்வுப் போட்டி இந்த மாதம் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளதாக ஜூடோ சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ரவீந்திரன் சுஜீபா இந்த வருடமே ஜூடோ விளையாட்டில் ஈடுபட ஆரம்பித்தார். அவருக்கு தீவிர பயிற்சிகளைத் தொடர்ந்து வழங்கினால் தேசிய ரீதியிலும், சர்வதேசப் போட்டிகளிலும் பதக்கம் வெல்லக் கூடிய ஆற்றல் இருக்கின்றது. இதேவேளை, இந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கான விளையாட்டு போட்டி விழாவுக்கான ஜூடோப் போட்டி மற்றும் தேசிய விளையாட்டு விழாவுக்கான ஜூடோப் போட்டிகளில் சுஜீபாவின் மூத்த சகோதரி ர்வீந்திரன் தமிழ்மகள் பதக்கங்களை வென்றமையும் இங்கு சுட்டிக்காட்டப் பட வேண்டும் என கிளிநொச்சி மகாதேவா ஆசிரம சைவ சிறுவர் இல்ல ஜூடோ பயிற்றுவிப்பாளர் பி. டபிள்யூ. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

ஜூடோ போட்டியில் வடமாகாணம் சார்பாக முதல் பதக்கம் வென்றவர் தமிழ்மகள். எதிர்காலத்தில் இன்னும் தமிழ்மகள் போன்று பல வீராங்கனைகளை உருவாக்கி வடமாகாணத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் செயற்படுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் யுவராஜ்

(சென்னை)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் யுவராஜ்சிங் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். ஆட்டத்திறன் இன்மையால் சிரேஷ்ட வீரர்களான சேவாக், கம்பீர் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி எதிர்வரும் 10ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஒரு ருவென்ரி-20 போட்டி மற்றும் 7 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.

10ஆம் திகதி ருவென்ரி-20 போட்டி ராஜ்கோர்ட்டில் நடைபெறவுள்ளது. ஒருநாள் போட்டித்தொடரின் முதல் போட்டி 13ஆம் திகதி புனேவில் ஆரம்பமாகவுள்ளது. கடைசி மற்றும் 7ஆவது ஒருநாள் போட்டி நவம்பர் 2ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளது.

இதில் ருவென்ரி-20 போட்டி மற்றும் முதல் 3 ஒருநாள் போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று சென்னையில் அறிவிக்கப்பட்டது. இதில் யுவராஜ்சிங் மீண்டும் அணியில் இடம்பிடித்தார். 9 மாதங்களாக அணியில் இடம்பெறாமல் இருந்த அவர் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதால் தேர்வு பெற்றார்.

கடைசியாக அவர் கடந்த ஜனவரி மாதம் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்தார்.

15 பேர் கொண்ட இந்திய அணி விவரம் வருமாறு: டோனி (கப்டன்), ஹோலி, தவான், ரோகித் சர்மா, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ஜடேஜா, அஸ்வின், புவனேஸ்வர் குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், அமித் மிஸ்ரா, அம்பதி ராயுடு, முகமது சமி, ஜெய்தேவ் உன்கட்.

# அரையிறுதியில் ராஜஸ்தான்



(ஜெய்ப்பூர்)

சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிக்கு ராஜஸ்தான் அணி முன்னேறியது. நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் பேர்த் அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக வீழ்த்தியது.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் இரவு நடந்த 5ஆவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி–20 தொடருக்கான ஏ பிரிவு லீக் போட்டியில் ராஜஸ்தான் (இந்தியா), பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் (அவுஸ்ரேலியா) அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பேர்த் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அடம் வோஜஸ் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கெவான் கூப்பர் நான்கு, பர்வின் டாம்பே, ஜேம்ஸ் பால்க்னர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 121 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 16.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரஹானே 53 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 62, சாம்சன் 42 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏற்கனவே மும்பை, லயன்ஸ் அணிகளை வீழ்த்திய ராஜஸ்தான் அணி, ஹட்ரிக் வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறியது. ராஜஸ்தான் அணியை சொந்த மண்ணில் (ஜெய்ப்பூர், சவாய் மான்சிங் மைதானம்) அசைக்க முடியவில்லை. இங்கு, கடந்த பிறிமியர் தொட ரில் 8 மற்றும் தற்போதைய சம்பியன்ஸ் லீக்கில் 3 (எதிர், மும்பை, லயன்ஸ், பேர்த்) சேர்த்து, தொடர்ந்து 11 வெற்றிகளை பதிவு செய்து, ஆதிக்கம் செலுத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# பரபரப்பான போட்டியுடன் வெளியேறியது லயன்ஸ்



(ஜெய்ப்பூர்)

பரபரப்பான சம்பியன்ஸ் லீக் போட்டியில், ஓடாகோ வோல்ட்ஸ் அணி சூப்பர் ஓவர் முறையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மூன்று போட்டியில் தோல்வி அடைந்த லயன்ஸ் அணி, அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

ஜெய்ப்பூரில், நேற்று நடந்த 5ஆவது சம்பியன்ஸ் லீக் தொடருக்கான ஏ பிரிவு லீக் போட்டியில், ஹைவெல்ட் லயன்ஸ் (தென்னாபிரிக்கா), ஓடாகோ வோல்ட்ஸ் (நியூசிலாந்து) அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஓடாகோ அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய லயன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அபாரமாக ஆடிய குயின்டன் டி காக் 63 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக 103, ஜீன் சைம்ஸ் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 168 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஓடாகோ அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரூதர்போர்ட் 32, பூர்டர் 32 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் போட்டி சம நிலையானது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கான சூப்பர் ஓவர் வழங்கப்பட்டது.

இதில் இரு அணிகளுக்கும் தலா ஒரு ஓவர் வழங்கப்படும். லயன்ஸ் அணியின் சோகைல் தன்வீர் வீசிய முதல் பந்தை நீஷாம் பவுண்டரிக்கு விரட்டினார். கடைசி பந்தை கப்டன் பிரண்டன் மெக்கலம் சிக்சருக்கு பறக்கவிட்டார். ஓடாகா அணி ஒரு ஓவரில் 13 ஓட்டங்களைப் பெற்றது.

பின், களமிறங்கிய லயன்ஸ் அணியின் குயின்டன் டி காக், நீஷாம் வீசிய முதலிரண்டு பந்தில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். மூன்றாவது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். நான்காவது பந்தில் ஜீன் சைம்ஸ் (0) ஆட்டமிழந்தார். ஐந்தாவது பந்தில் பிரிடோரியஸ் ஒரு ஓட்டம் எடுத்தார்.

கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், 2ஆவது ரன்னுக்கு ஓடிய பிரிட்டோரியஸ் (1) ரன்-அவுட் ஆனார். இதனையடுத்து சூப்பர் ஓவரில் இரு அணிகளும் 13 ஓட்டங்கள் எடுத்தன.

பின் வெற்றியாளை தீர்மானிக்க போட்டியில் அடிக்கப்பட்ட பவுண்டரி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், லயன்ஸ் (11) அணியை விட ஒரு பவுண்டரி கூடுதலாக அடித்த ஓடாகோ வோல்ட்ஸ் (12) அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. மூன்று போட்டியில் தோல்வி அடைந்த லயன்ஸ் அணி, பரிதாபமாக வெளியேறியது.



# கென்ய வீரர் மரதனில் சாதனை

பேர்லின் மரதனோட்டப் போட்டியில் கென்யாவின் வில்சன் கிப்ஷாங் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

31 வயதான கிப்ஷாங் 2 மணித்தியாலங்கள் மூன்று நிமிடங்கள் 23 செக்கன்களில் போட்டித் தூரத்தை கடந்து இந்த மைல்கல்லை எட்டினார்.

ஜேர்மன் தலைநகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சக நாட்டு வீரரான மார்ட்டின் லேல் 2 ஆவது இடத்தையும், எத்தியோப்பியாவின் சேகேயா கேபேடி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்

இதற்கு முன்னர் நடைபெற்ற பேர்லின் மரதன் ஓட்டத்தில் சக நாட்டு வீரரான பற்றிக் மக்கோவ் இந்தச் சாதனையை தன்வசம் வைத்திருந்தார்.

போட்டியின் தூரத்தை பற்றிக் மக்கோவ் இரண்டு மணித்தியாலங்கள் மூன்று நிமிடங்கள் 38 செக்கன்களில் நிறைவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உபாதை காரணமாக பேர்லின் மரதன் ஓட்டத்தில் இருந்து பற்றிக் மக்கோவ் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் ஜோதி தொடரோட்டம் ஆரம்பம்




(சோச்சி)

இந்த வருடத்திற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடருக்கான ஒலிம்பிக் ஜோதி நேற்று முன்தினம் பழங்கால ஒலிம்பியா நகரில் உள்ள ஹீரா கோவிலின் இடிபாடுகளிடையில் கோலாகலமான நிகழ்ச்சி ஒன்றில் ஏற்றப்பட்டது. இந்த விழாவில் ஒலிம்பிக் சபையின் தலைவர் தோமஸ் பாக் கலந்து கொண்டார். விழாவின் தொடக்கத்தில் வெள்ளை உடை அணிந்த பெண்கள் விரிவான ஒரு நடன நிகழ்ச்சியை நடத்தினர். அதன் பின்னர் சூரிய ஒளிக்கதிர்களில் இருந்து தீப்பிழம்பு பெறப்பட்டு அதன்மூலம் இந்த ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது.இந்த ஜோதியை முதலில் கிரீஸ் நாட்டின் பனிச்சறுக்கு வீரரான லோவானுஸ் அன்ட்டாய்னியோ பெற்றுக்கொண்டார். பனிச்சறுக்குக்கான சீருடையுடன் கையில் ஆலிவ் மரக்கிளை ஒன்றையும் ஏந்தி வந்த இவர் ஒலிம்பிக் ஜோதியின் ஓட்டத்துக்கான முதல் தூரத்தைக் கடந்தவுடன் அந்த ஜோதியை ரஷ்ய ஐஸ் ஹொக்கி விளையாட்டின் பிரபல வீரரான அலெக்சாண்டர் ஒவேக்கின்னிடம் ஒப்படைத்தார்.

நேற்று முன்தினத்திலிருந்து 123 நாட்கள் 65,000 கி.மீ பயணிக்கும் இந்த ஒலிம்பிக் ஜோதியானது சர்வதேச விண்வெளி மையம், ரஷ்யாவின் பைக்கால் ஏரியின் அடிப்பகுதி, ஐரோப்பாவின் உயரமான எல்ப்ருஸ் மலை போன்றவற்றை அடைந்து சோச்சியில் நடைபெற உள்ள ஆரம்ப விழாவிற்கு கொண்டு வரப்படும். இந்த ஜோதியை ஏந்திச் செல்லும் 14,000 பேரும் ரஷ்யாவின் அனைத்துப் பகுதிகளிலும் சென்று வருவார்கள்.விழாவில் பேசிய ஒலிம்பிக் குழுத் தலைவர் தோமஸ் பாக், ஒலிம்பிக் ஜோதி நட்புணர்வையும், பாகுபாடுகள் எதுவும் இல்லாத மரியாதையின் சின்னத்தையும், போட்டிகளின் சிறப்பையும் விளக்குவதாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார். அரசியல் பிரச்சினைகள் போட்டியைப் பாதிக்கக்கூடாது என்பதனையும் அவர் தெரிவித்தார்.

# சவாலுக்குத் தயார்



விம்பிள்டன், யு.எஸ். ஓப்பன் போன்ற கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் ஆண்கள் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் சம்பியன் பட்டம் வெல்லும் வீரர், வீராங்கனைக்கு சம அளவிலான ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது. இதற்கு முன்னணி வீரர்களிடையே அதிருப்தி நிலவுகிறது. இது குறித்து இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரே கூறுகையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நாங்கள் ஒவ்வொரு போட்டியிலும் 5 செட் வரை கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

ஆனால், மகளிர் பிரிவில் அதிகபட்சம் மூன்று செட் தான் விளையாடுகிறார்கள். பரிசுத் தொகை மட்டும் சரிசமமாக வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்கிறார்கள். இதில் நியாயம் இல்லை. மகளிர் ஒற்றையர் ஆட்டங்களும் 5 செட்கள் நடைபெற வேண்டும். வீராங்கனைகள் இதற்குத் தயாராக இருந்தால் மட்டுமே சரி சமமான பரிசுத் தொகை கேட்கலாம். இல்லாவிட்டால் எங்களுக்கும் 3 செட் ஆக்க வேண்டும் என்று சவால் விடுத்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் இதற்கு பதிலடி கொடுத்திருக்கிறார். தற்போது மகளிர் பிரிவில் 3 செட் ஆட்டங்களே நடந்து வருகின்றன. அதை 5 செட்களாக மாற்றினாலும் நாங்கள் விளையாட தயாராகவே இருக்கிறோம். குறிப்பாக, கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் இந்த மாற்றம் செய்யப்பட்டால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்கிறார் வீனஸ். மகளிர் ரென்னிஸ் சங்க தலைவர் ஸ்டேசி அலஸ்டரும், வீராங்கனைகள் இந்த சவாலுக்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சம்பியன்



தாய்லாந்து ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் கனடாவின் மில்ஸ் ரயோனிக்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கெக்கில் இப்போட்டி நடைபெற்றது. லீக் மற்றும் அரையிறுதி சுற்றுகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டி நடைபெற்றது.

இறுதிச்சுற்றில் போட்டித் தரவரிசையில் 3ஆம் இடத்தில் உள்ள ரயோனிக், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெர்டிச்சுக்கு எதிராக பலப் பரீட்சை நடத்தினார்.

இதில், ரயோனிக் 7-6 (7∴4), 6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று பட்டத்தை வென்றார். இந்த ஆண்டில் அவர் வென்ற 2ஆவது பட்டம் இதுவாகும்.


# பார்சிலோனா புதிய சாதனை

(அல்மிரியா)

அல்மிரியா அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற பார்சிலோனா அணி, தொடர்ந்து 7ஆவது வெற்றியை பதிவு செய்து புதிய சாதனை படைத்தது. ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் நடப்பு சம்பியன் பார்சிலோனா அணி, அல்மிரியா அணியை எதிர் கொண்டது. இதில் போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி (21ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இதற்கு அல்மிரியா அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. தொடர்ந்து நடந்த இரண்டாவது பாதியிலும் அசத்திய பார்சிலோனா அணிக்கு அட்ரியானோ (56ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு கடைசி வரை அல்மிரியா வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.



இறுதியில், பார்சிலோனா அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம், இந்த ஆண்டுக்கான தொடரில் பங்கேற்ற 7 போட்டியிலும் வெற்றி பெற்று பார்சிலோனா அணி, புதிய சாதனை படைத்தது. இதற்கு முன் கடந்த 2009-10, 2012-13 ஆண்டுகளில் நடந்த லா லிகா தொடர்களில் பார்சிலோனா அணி தொடர்ந்து 6 போட்டிகளில் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.



# முதுமை



லியூ யூ ஸிக்கு -
நீங்களும் நானும்
ஒன்றாக முதியவர்களாகிறோம்.
முதுமை என்னதான் என்று
நாம் கேட்டுக் கொள்ளலாம்.
இரவு வரும் முன்பேயே
சோர்ந்த கண்கள் மூடிக்கொள்கின்றன.
உச்சி வேளையிலும் கூட
வாரிக்கொள்ளாத தலைமுடி.
சில வேளைகளில்
கம்பை ஊன்றி வெளியே ஒரு நடை.
இல்லை,
நாள் முழுக்க கதவுகளை அடைத்து
உள்ளேயே இருத்தல்.
பளபளத்த கண்ணாடியில்
முகம் பார்க்கத் துணிவு இல்லை.
சின்னஞ் சிறு எழுத்துக்களாலான
புத்தகங்களைப் படிக்க முடியவில்லை.
பழைய நண்பர்களோடுள்ள அன்பு
ஆழம் மிக்கது.
இளைஞர்களோடு பழகுதல்
குறைந்து குறைந்து போகிறது.
ஒன்றே ஒன்று :
நீங்களும் நானும் சந்திக்கும்போது
எப்போதும் போல
வீண்பேச்சின் இன்பம்
உச்ச நிலையில்.

**- 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சீனக் கவி போ சு இ.**

# மனக் கண்ணின் நிறம்

பழங்காலத்துப் புலவர் ஒருவர் ஆற்றோரமாகச் சென்றபோது ஒரு மடுவின் கரையில் நின்று இளைஞர்கள் விளையாடும் காட்சியைக் கண்டார். மடுவின் கரையில் இருந்த மருத மரத்தின் கிளை ஒன்று நீர்ப் பக்கமாகச் சாய்ந்துகிடந்தது. அந்தக் கிளையில் இளைஞர் ஏறி, "துடும்" என்று நீரில் குதித்து, ஆழ்ந்து முழுகி மணல் கொண்டு வந்து கரையில் உள்ளவர்க்குக் காட்டி மகிழ்ந்தனர். அலை பிதிர்ந்து எழுமாறு அவர்கள் ஆழ்ந்த நீரில் குதிக்கும் காட்சியைக் கண்டு கரையில் நிற்பவர் வியப்பு உற்றனர். வஞ்சனை அறியாத அந்த இளைஞரின் ஆடலைப் புலவரும் கண்டார். மற்றவர்களைப் போல் அவர் வியப்பு உற்று நிற்கவில்லை.

கற்பனைத் திறம் மிக்க அவருடைய நெஞ்சம், இளமைப் பருவத்தில் அவர் ஆடிய விளையாட்டுகளை நினைவூட்டியது. புலவர் அப்போது முதுமை உற்றுக் கோல் ஊன்றி இருமலும் உடைய வராய் இருந்தார். தளர்ந்த அந்த முதுமையோடு அவர், மடுவில் பாய்ந்த இளை ஞரைக் கண்டதும் தம் இளமைப் பருவத்தை நினைத்தார். தாமும் அவ்வாறு மறையும் மாயமும் அறியாமல் நீரில் குதித்து மூழ்கி விளையாடிய நாட்களை நினைந்தார். இளமகளிரோடு சேர்ந்து பாவை வைத்து விளையாடி அவர்களோடு கை கோத்து ஆடி மகிழ்ந்த நாட்களையும் நினைத்தார். அந்த இளமையின் துடிதுடிப்பான ஆட்டங்களைக் கற்பனையால் நினைந்து பார்த்த பிறகு தம்முடைய தண்டு ஊன்றிய முதுமையையும் எண்ணினார். அந்த இளமை எங்கே போயிற்றோ என்று வருந்தினார்.



"இனிநினைந்து இரக்கம் ஆகின்று திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத்து உறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படுகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணல் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே."

- புறநானூறு (243)

இது கழிந்து போன இறந்த காலத்தை நினைந்து இரங்கிய இரக்கத்தால் ஏற்பட்ட கற்பனை.

வாழ்விலிருந்து பின்னோக்கிச் சென்ற கனவு என்று இதனைக் குறிப்பிடலாம். அந்த நிகழ்ச்சி, புலவர் பாடிய அப்போது நிகழ்ந்தது அன்று; கல்லா இளமையின்போது பல ஆண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்தது. அதனை அவ்வாறே கற்பனை செய்த மனக் கண்ணின் திறத்தை இங்கு காணலாம்.

# பிழையின்றித் தமிழ் 49

**- ஞானச்செல்வன் -**

**முறையாகுமா இந்த மொழிக்கலப்பு?**

வேளாண்மையில் கலப்புமுறை விளைச்சல் என்பது வரவேற்கத் தக்கதாகலாம். கலப்புத் திருமணங்களும் பாராட்டத்தக்கவையே. ஆனால் மொழிக் கலப்பு அத்தகையதாகாது. தமிழில் பிறமொழிக் கலப்பு காலம் காலமாக நடந்து வருவதுதான். ஆனால் இப்போது தமிழில் ஆங்கிலம் கலப்பதுபோல் இவ்வளவு கேவலமாக முன் எப்போதும் நடந்ததில்லை.

ஆங்கிலத்தில் பேசுவது நாகரிகம். படித்தவர்க்கு அடையாளம் என்றே இப்போதும் பலர் கருதுகிறார்கள். பள்ளிப் பிள்ளைகள், வீட்டிலிருந்து புறப்படும்போது, "அம்மா போயிட்டு வர்றேன்" என்று சொல்லுவதைப் பெற்றோரே இழிவாகக் கருதுகிறார்கள். "மம்மி பை பை, டாடி பை பை" என்று சொல்லப் பழக்கிவிடுகிறார்கள். மதிய உணவு என்பதைக் கூட "லஞ்ச்" என்று சொல் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

யாரும் இப்போது வீட்டிலிருந்து எழுந்து விடை பெறும்போது "போய் வருகிறேன்", அல்லது "வரட்டுமா?" என்று சொல்லுவதில்லை. எல்லாரும் "பை பை" தான். ஆங்கிலத்தில் படித்தால் மட்டுமே அறிவு வளரும் என்ற புதிய மூடநம்பிக்கை நாட்டில் பரவிக் கிடக்கிறது.

நம்முடைய காட்சி ஊடகங்களில், இசை, நாட்டியம், நகைச்சுவை, சந்திப்பு, திரைப்படம் என்று எந்தப் பொருளில் நிகழ்ச்சி நடந்தாலும், நிகழ்ச்சியின் வருணனையாளர்- அவருடன் உரை யாடும் விருந்தினர், நடுவர்கள் - இப்படி யாராக இருப்பினும் தமிழில் பேசுகிறார்களா? தமிழில் தொடங்குவார்கள். பிறகு கடகடவென என்ன சொல்லுகிறார் என்பதே நமக்குப் புரியாதவாறு ஆங்கிலத்தில் கொட்டி முழக்குகிறார்கள். பிறமொழி யைத் தாய்மொழியாகக் கொண்டவர் பேசினால் கூட ஏற்றுக் கொள்ளலாம். தமிழைத் தாய்மொழியாக உடையவரும் பேசும்போது எரிச்சல் ஏற்படுகிறது.

"பண்ணு" என்பதைப் பயன்படுத்தி எப்படி "பண்ணித் தமிழ்" பேசுகிறோம் என்பதையும் முன்னரே எழுதியிருக்கிறோம். அண்மையில் ஒரு சமையல் கலை நிகழ்ச்சி தொலைக்காட்சியில் கண்ணிற்பட்டது. பேசுகின்ற பெண்மணி குக் பண்ணி, ஷேக் பண்ணி, என்று பல பண்ணிகளை அடுக்கினார். சமைத்து, கலக்கி என்று சொன்னால் நமக்குப் புரியாதா?




நமது திரைப்படங்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தமிழை வளர்க்க வேண்டுமென்று நாம் கோரவில்லை. தமிழைச் சிதைக்காதீர்கள். இருப்பதைக் கெடுக்கா தீர்கள் என்றே வேண்டு கிறோம். "ஜாலியோ ஜிம்கானா" பாடல் கேட்டிருக்கிறோம். "டடடா டடடா டட்டாடடா" பாட்டும் நாம் அறிவோம். "மேலே பறக்கும் ராக்கெட்டு, மின்னல் பூச்சி ஜாக்கெட்டு" என்றும் நம் காதுகளில் தேள் கொட்டியுள்ளது. இப்போது கருநாகப் பாம்பே வந்து கடிக்கிறது:

"யூ வான்ட் டு சீல்மை
கிஸ்
பாய் யூ கான்ட் டச்
திஸ்
எவரிபொடி
ஹைப்நோடிக்
ஹைப்நோடிக்
சூப்பர் சோனிக்
சூப்பர் ஸ்டார் கான்ட்
கான்ட் கான்ட் கெட்
திஸ்"

இப்படிப் போகிறது தமிழ்ப் படப்பாட்டு. சூழ்நிலைக்கேற்ப நாங்கள் எழுதுகிறோம் என்பார்கள். பின்னர் ஏன் பாட்டைத் தமிழில் தொடர வேண்டும்?

பிற மொழி கலந்து பேசுபவர்கள் குழந்தைகளை எப்படிக் கொஞ்சுவார்கள் என்று புலப்படவில்லை. "ஐயே...", "மை கோல்டே" என்று கூறிக் கொஞ்சுவார் களா? அழுது அரற்றும்போது, மதர் கோயிட்டாங்களா? டாட் போயிட்டாங்களா? என்பார்களோ?

பணியாற்றும் பெண்களை "அம்மா" என்றழைத்தால், நான் என்ன உங்கள் அம்மாவா? என்கிறார்கள். மேடம் என்று சொன்னால் (இதன் பொருள் அம்மாதானே?) மகிழ்கிறார்கள். இப்போது மேடமும் போய், "மேம்" என்கிறார்கள்.

காலத்தின் போக்கை அறியாமல் பழங்கதை பேசுகிறோம் என்று கருத வேண்டாம். எத்தனை காலம் மாறினாலும் எத்துணை மாற்றங்கள் ஏற்பட்டாலும் மொழியும் பண்பாடும் சீரழிய நாம் அடைகின்ற வளர்ச்சி உண்மையில் வளர்ச்சியாகாது.

"ஓகே, ஓகே", "வெரி நைஸ்", "வொன்டர்புல்", "சூப்பர்", "தாங்யூ சோ மச்", ".:.பன்டாஸ்டிக்" என்றெல்லாம் நம் பேச்சில் இணைந்து வரும் சொற்களால் நாம் உயர்ந்துவிட மாட்டோம். நம் செயல்களே நம்மை உயர்த்து கின்றன. உலகம் போகிற போக்கில் நாமும் போக வேண்டும் என்பார்கள். செம்மறி ஆட்டுக் கூட்டமாய்ப் போக வேண்டுமா? சிந்தனையுள்ள மனிதனாக வாழ வேண்டுமா?

# சற்றே பெரிய காதுகள்!

— விழியன் —

குழந்தைகளின் உலகம் எப்படிப்பட்டது என நாமாக ஒன்றினை விவரிக்கலாம் அல்லது கற்பனை செய்துகொள்ளலாம். ஆனால் அதில் நித்தமும் வாழ்வது சாத்தியமல்ல அதனைக் கடந்து வந்த நாம் நிச்சயம் அதனை மிச்சம் மீதியின்றி மறந்திருப்போம். குழந்தைகளின் செயல்களின் வார்த்தைகளின் விவரிப்புகள் கொண்டு அது இப்படி இருக்கலாம் என யூகம் மட்டுமே செய்யலாம். ஆனாலும் அவர்களின் உலகத்தை பெற்றோராகிய நாம் அணுக வேண்டும். ஒவ்வொரு பெற்றோருக்கும் அந்தத் தேவை அதிகரித்து உள்ளது, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு. மாறி வரும் சமூகச் சூழலும், புதிய தொழில்நுட்பமும், அவசர வாழ்வும், கலாசார மாற்றங்களும் குழந்தைகளை இன்னும் அக்கறையுடன் அணுக நம்மை நகர்த்துகின்றது.

எங்க வீட்டில் குழலி பேச ஆரம்பித்த உடனே நாங்கள் (நான், மனைவி, அப்பா, அம்மா) சற்றே பெரிய காதுகளை வளர்க்க ஆரம்பித்தோம். நிதானமாகக் குழந்தை சொல்வதை மாறி மாறி கேட்போம். கேட்பதோடு அல்லாமல் அதனைக் கவிதையான தருணங்களாக்கி இரசிக்கவும் செய்தோம். குழந்தைகளுக்கு அதிக நேரம் அவர்களின் பிரச்சினைகளை, பயங்களை, தவறுகளை நம்மிடம் மறைக்க முடியாது, தெரியவும் தெரியாது. அவர்களின் சொற்களின் வழியே அவை வழிந்தபடியே இருக்கின்றன. நாம் தான் அவற்றை அடையாளம் கண்டு கொண்டு நிவர்த்தி செய்ய வேண்டும்.

நாளின் மிகச் சிறப்பான தருணங்களாக நான் உணர்ந்தது மகளை வண்டியின் டாங்கில் அமர்த்திப் பள்ளிக்குச் செல்லும்போது நிகழ்த்தும் உரையாடல்களைத்தான். அவளின் பள்ளி நண்பர்களிடம் செலவிடும் சில விநாடிகளில் அந்நாளிற்கான உற்சாக பானமாய் அமைந்துவிடும். விநோதமாக, வண்டியில் செல்லும் போது குழலியின் கவனமும் கேட்கும் திறனும், கதை வளமும் அதிகமாக இருந்தது. பள்ளியில் சேரும் முன்னரே அவளுக்குச் சொல்லிக்கொடுத்த பாடல்கள் அனைத்தும் இந்த டாங்கரில் அமர்ந்த படியே.

குழலியின் நண்பர்களுக்குள் என்னையும் இணைக்கத் தொடங்கினேன். தினமும் அவர்களுடன் பத்து நிமிடம் தான் செலவு செய்வேன். அன்றைக்குத் தேவையான சக்தியினையும் உற்சாகத்தையும் ஊட்டிவிடுவார்கள். வெறும் களத்தினையும் உரையாடலுக்கான ஆரம்பத்தினை மட்டுமே அவர்களுக்கு நான் தருவேன், அதுவும் சில நேரத்தில் தான்.

லீவுக்கு ஊருக்குப் போன கதை, போகப்போகிற கதை, அவனுக்கு முட்டியில் அடி, குர்ஷாத்துக்கு உடம்பு சரியில்லை, சித்தி தான் என்னை ஸ்கூட்டர்ல கூட்டிவந்தாங்க, என் அப்பா யார் தெரியுமா?, எனக்கு தம்பிப் பாப்பா பிறந்திருக்கே, என்க்கு கையில அடி, நான் ஹோம்வேர்க் செய்யேல்ல, நான் ஏரோப்ளேன் பார்த்தேன், நானும், நான் கூட, மிஸ் என்னை குட் கேர்ள் சொன்னா, என் பொம்மை உடைஞ்சு போச்சு, குழலிக்குச் சொக்ளேற் கொடுத்தேன், நான் லட்டு சாப்பிட்டேன், எனக்கு வயித்து வலி...இவ்வாறாகக் கதைகள் நீளும் சுவாரஸ்யமாக.

இங்கே இவர்களுடன் நான் பகிர்ந்ததெல்லாம் ஒரு கைநீட்டலும் காது நீட்டலும் தான். அவர்கள் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டேன். தினமும் இந்த உரையாடல் தொடர்ந்தது. அப்போது கவனித்த விஷயம் இவர்களின் சின்னச் சின்னச் சந்தோஷங்கள் காது கொடுத்து கேட்கப்படுவதே இல்லை. நமக்குச் சின்ன விஷயமாக இருக்கலாம், ஆனால் அவர்களின் குதூகலத்திற்கு அதுவே வித்தாக இருக்கும். பள்ளியில் ஆசிரியர்கள் பேச விடப்போவதில்லை, எத்தனை மாணவர்களுக்குத் தான் அவர்கள் காது கொடுப்பது? முடிந்த அளவிற்கு அவர்களும் தரத் தான் வேண்டும். அடுத்தது பெற்றோர்கள். இவர்களுக்கு இந்த முழுப் பொறுப்பும் இருக்கின்றது. அவர்கள் கூறுவதைத் கவனமாக கேளுங்கள், அவர்கள் கேட்கும் கேள்விகளைக் காது கொடுத்துக் கேளுங்கள், கேள்விகளை நசுக்கிவிட வேண்டாம். கேள்விக்கு பல சமயம் பதில் தெரியாமல் போகலாம், அல்லது கேள்வி கேட்கும்போது நமக்கு உடல்சோர்வு, வேலைப் பளு இப்படி இருக்கலாம், ஆனால் கேள்விகேட்கும் அவர்கள் ஆர்வத்தை நசுக்கிவிட வேண்டாம்.



குழந்தைகளின் உலகினை முழுமையாகப் புரிந்துகொள்ளப் பெரிய காதுகள் அவசியமாகின்றது. அதன் மூலமே அவர்களின் சொல் வளமும் நமக்குத் தெரியும். அவர்களின் கதை சொல்லும் திறன் நமக்கு விளங்கும். அவர்கள் நம்மிடம் விரும்புவது எதைவிடவும் நம் காதுகளைத்தான்.

பள்ளியின் கடைசி நாள். குழலியை வகுப்பில் விட்டு அவளுடைய நண்பர்களுக்கு வாழ்த்து சொல்லிவிட்டு வெளியே வந்தேன். கொஞ்சம் சோர்வாகக்கூட இருந்தது கடைசி நாள், இனி கொஞ்ச காலத்திற்கு எல்லோரையும் பார்க்க முடியாது என்று. தூரத்தில் குழலியின் வகுப்புத் தோழி மிகச்சோர்வுடன் மெல்ல அவள் தாயுடன் நடந்து வந்தாள். இந்த வயதில் என்ன வாட்டம் என்று தெரியவில்லை. சில முறை அவளுடன் பேசி இருக்கிறேன். எனக்குக் கை கொடுப்பதில் அவ்வளவு விருப்பம் அவளுக்கு. தூரத்தில் என்னைப் பார்த்ததும் முகம் மலர்ந்து ஓடி வந்தாள். கை கொடுத்தாள். "குழலி எனக்கு நேத்து ஒரு நூல் கொடுத்தாள்" (துணியில் இருக்கும் நூல். அது இவர்களுக்குள் ஒரு விளையாட்டு) "லீவுக்கு நான் நாளைக்கு ஊருக்கு போனேன் (போறேன்).." இப்படியாகப் பேச ஆரம்பித்தாள். அவளுடைய அம்மா "வா வா நேரமாச்சு..." எனத் தள்ளிக்கொண்டு போனார்கள். சோர்வாக இருந்தவள் மிக உற்சாகமாக மாறி இருந்தாள். திரும்பி ஒரு டாட்டா காட்டிவிட்டு மறைந்தாள். என்னிடம் வந்து பேசியதற்கு முக்கிய காரணம் அவர்களிடம் காட்டிய என் பெரிய காதுகள் மட்டும் தான்.

பெற்றோர்களே, கொஞ்சம் பெரிய காதுகளை வளர்த்துக்கொள்ளுங்கள்!

# நடக்கப்போவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் மக்கள்...



—— எஸ்.ஹமீத் கட்டுரையிலிருந்து.

சுபாவத்தில் விக்னேஸ்வரன் அவர்கள் மென்மையானவர். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களிடம் காணப்படும் "கடும் போக்கு" விக்னேஸ்வரனிடம் கிடையாது. விடயங்களையும் பிரச்சினைகளையும் அவர் உணர்ச்சி ரீதியாகவன்றி, அறிவு ரீதியாகவே சிந்திப்பவர். நடந்து முடிந்த தேர்தலுக்காக அவர் "புலித் தோலை" அரைகுறையாகப் போர்த்திக் கொண்டிருந்தாரே தவிர, அவருக்கும் "புலி"யின் குணங்களுக்கும் சம்பந்தமே கிடையாது. இத்தகு அவரது இயல்பை "போராட்ட குணம்" கொண்ட தமிழ்த் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றும் மக்களும் பொருந்திக் கொள்வார்களா என்பதும் கேள்விக்குறிதான்.

ஒரு வகையில் விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி மகிந்தவிற்கு உறவினர். இதனை ஜனாதிபதியே பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். இந்த உறவைத் தாண்டி, ஜனாதிபதிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எதிராக விக்னேஸ்வரன் அவர்களினால் செயற்பட முடியுமென்று தோன்றவில்லை. ஒரு பிரபாகரன் போல், ஒரு அமிர்தலிங்கம் போல், ஒரு சம்பந்தன் போல் இன்னும் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், சிறிதரன், ஆனந்தசங்கரி போல் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் வன்மையாக விமர்சனம் செய்து தன் "அரசியல் இருப்பை" விக்னேஸ்வரன் தக்க வைத்துக் கொள்ளக் கூடியவராகவும் தெரியவில்லை.

எடுத்ததெற்கெல்லாம் "இந்தியா... தமிழ் நாடு" என்றும் புலம் பெயர்ந்தோர் என்றும், தமிழ் மக்களை இத்தனை காலமாக ஏமாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பினரைப் போலல்லாது, விக்னேஸ்வரன் தனித்துவமாகச் சிந்திக்கக் கூடியவர். அவர் இந்தியாவினது அல்லது தமிழ்நாட்டு அரசியல்வாதிகளினது அல்லது புலம்பெயர் குழுக்களது அழுத்தங்கள் தன்மீது திணிபடுவதை ஒரு போதும் அங்கீகரிக்க மாட்டார். ஆனால், இன்னும் இந்திய, தமிழ்நாட்டு, வெளிப்புலத்து மாயைகளை நம்பியிருக்கும் கூட்டமைப்பினர், விக்னேஸ்வரன் அவர்களின் "தனித்துவத்தை"ப் பொறுத்துக் கொள்வார்களா என்பதும் யோசிக்க வேண்டிய விடயம்தான்.

விக்னேஸ்வரன் அவர்களை ஒரு புறம் வைத்துவிட்டுப் பார்த்தால்,

வட மாகாண சபைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் 30 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் அமைச்சுப் பதவிகளைப் பெறப் போகும் அந்த சொற்ப உறுப்பினர்களை ஏனையோர் மனதார ஏற்றுக் கொள்வார்களா என்பதும் இயல்பாகவே எழக் கூடிய பிரச்சினைதான். வவுனியா மாவட்டத்திற்கென்று ஒரு அமைச்சுப் பதவி வேண்டும் அது வைத்தியக் கலாநிதி ப. சத்தியலிங்கத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் இப்போதே எழத் தொடங்கி விட்டன. இது போன்று தமது கட்சியைச் சார்ந்தவருக்கு -தொகுதியைச் சார்ந்தவருக்கு - ஊரைச் சார்ந்தவருக்கு - உறவைச் சார்ந்தவருக்கென்று இன்னும் எத்தனை எத்தனை கோரிக்கைகள் எழப் போகின்றனவோ தெரியவில்லை.

தமது அதிகார வரம்பிற்குள்ளே நியமனங்கள் - இடமாற்றங்கள் - கொந்தராத்துகள் - கொடுப்பனவுகள் - அபிவிருத்திகள் - ஏனைய உதவிகள் என்று எத்தனை பேரைத்தான் திருப்திப்படுத்த முடியும்...? எத்தனை கிராமங்களைத்தான் சந்தோஷப்படுத்த முடியும்...?

13ஆம் திருத்தச் சட்டத்தை முற்றாக அமுல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் ஒலித்துக் கொண்டிருக்கும் போதே, காணி அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கேயன்றி, மாகாண சபைக்கல்ல என உச்ச நீதிமன்ற தீர்ப்பு வெளிவந்திருக்கிறது. காணி அதிகாரமே இல்லையென்றான பிறகு, காவல்துறை அதிகாரங்களைப் பெறுவதென்பது வெறும் கற்பனையாகத்தான் இருக்கப் போகிறது.

இராணுவத்தை முற்று முழுதாக வட மாகாணத்திலிருந்து வெளியேற்றுவதோ அல்லது முகாம்களுக்குள் முடக்குவதோ நடந்து முடிந்த தேர்தலின் போதான கூட்டமைப்பினரின் பிரசாரத்துக்குப் பயன்பட்டிருக்கலாமே தவிர, ஒரு போதும் நடைமுறைச் சாத்தியமாகப் போவதில்லை.

ஆக, நம்பி வாக்களித்த மக்களுக்கு வட மாகாண சபை மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவற்றையெல்லாம் வழங்கப் போகிறதென்பது எதிர்பார்ப்புமிக்க கேள்வியாக எழுந்து நிற்கிறது.

# 1660 மின் மாற்றிகள் எதியோப்பியாவுக்கு ஏற்றுமதி

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட 1660 மின்மாற்றிகள் எதியோப்பியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சியின் தலைமையில் லங்கா ட்ரான்ஸ்போமர் வேலைத் தளத்தில் வைத்து எதியோப்பிய மின்சார கூட்டுத்தாபனத்தின் பிரதம பொறியியலாளர் பொகவே அபீராவிடம் இந்த மின்மாற்றிகள் கையளிக்கப்பட்டன.

100 கோடி ரூபா பெறுமதி கொண்ட 1660 மின்மாற்றிகள் ஏற்றுமதியாகின்றன. இந்த நிறுவனம் 1982 இல் உருவான மின்சார சபையில் இணைந்த ஒரு நிறுவனமாகும். உள்ளூர் உற்பத்தியாக ஆரம்பித்து பின்னர் ஏற்றுமதிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, ஜோர்தான், ஐக்கிய அரபு ராஜ்யம், ஈரான், இந்தியா, கென்யா, உகண்டா, குவைத், மாலைதீவு உட்பட இருபது நாடுகளுக்கு ஏற்றுமதிகள் விரிவுபடுத்தப்பட்டன. சர்வதேச தரத்துக்கு இவை உற்பத்தியாகின. வருடாந்தம் 4000 மின்மாற்றிகள் உற்பத்தியாகின்றன. 50 வீதமான உற்பத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. மொரீஸியஸ், டென்சேனியா, உகண்டா ஆகிய நாடுகளுக்கும் இவை ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

கடந்த 05 வருடங்களில் 6500 மின்மாற்றிகள் ஏற்றுமதியாகி உள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. அமைச்சின் மேலதிகச் செயலாளர்களான எம். ஐ. எம். ரபீக், ஜே. எம் கே. ஜயசேகர, மின்சார சபைத் தலைவர் டபிள்யூ. பீ. கனேகல, டிரான்ஸ்போமர் நிறுவனத் தலைவர் யூ. டி. ஜயவர்த்தன உட்பட பிரமுகர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

# மீண்டும் திறக்கப்படவுள்ளது யால தேசிய சரணாலயம்

(கொழும்பு)

யால தேசிய சரணாலயம் இன்று மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று முதல் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சரணாலயத்தை பார்வையிட முடியும் என வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

'தற்போது வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. தேவையற்ற தாவரங்கள் அகற்றப்பட்டுள்ளன. சரணாலயத்திற்குள் காணப்படும் கட்டடங்கள் நிறப்பூச்சு பூசப்பட்டு, கழிவறைகள் புனரமைக்கப்பட்டு, உயர் தரத்தில் யால சரணாலயம் காணப்படுகின்றது. சரணாலயத்தை பார்வையிட வருமாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். யால சரணாலயம் திறக்கப்படவுள்ளது"

யால தேசிய சரணாலயம் கடந்தமாதம் முதலாம் திகதியிலிருந்து மூடப்பட்டிருந்தது. வறட்சிக் காலத்தில் வன விலங்குகள் சுதந்திரமாக நடமாடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டிருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் வீடியோக் காட்சிகளை வைத்திருந்த இளைஞன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்குடாப் பொலிஸ் பிரிவில் விடுதலை புலிகளின் வீடியோக் காட்சிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பாசிக்குடா யானைக்கல் கடற்கரைப் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்படி இளைஞனை கைது செய்துள்ளனர்.

பொலிஸாரைக் கண்டு ஓடிய இளைஞனை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதுடன் கையடக்கத்தொலைபேசியையும் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, விடுதலைப் புலிகளின் வீடியோக் காட்சிகளை இளைஞன் தனது கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். பேத்தாளை விஷ்னு கோவில் வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இந்த இளைஞனிடம் கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூட்டமைப்பின் தீர்மானத்தை வாசுதேவநாணயக்கார வரவேற்பு



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வரவேற்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் வட மாகாணசபை முதலமைச்சர் உள்ளிட்டோர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இந்தத் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது.

ஜனாதிபதி முன்னிலையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வது பாராட்டப்பட வேண்டியதொன்று. வடக்கு அபிவிருத்திக்கு, மத்திய அரசாங்கத்தின் ஆதரவினை பெற்றுக்கொள்ள இது சிறந்த சந்தர்ப்பமாக அமையக் கூடும். எட்டு மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் ஜனாதிபதியுடன் சுமூகமாக செயற்பட்டு வருகின்றனர். வட மாகாணசபை முதலமைச்சர் எவ்வாறு செயற்படுகின்றார் என்பது குறித்து எதிர்காலத்தில் அறிந்து கொள்ள முடியும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# அதிபர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு, சென்.மேரிஸ் கல்லூரி அதிபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாடசாலையின் மலசல கூடத்திலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. நீர்கொழும்பைச் சேர்ந்த மெக்செல் பெர்ணாண்டோ (வயது 60) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது உடலில் வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டடுள்ளது. இவர், எதிர்வரும் நவம்பர் மாதம் ஓய்வு பெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 9 கிளைமோர் குண்டுகள் மட்டக்களப்பில் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆய்த்தியமலை பொலிஸ் பிரிவில் ஒன்பது கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டு செயல் இழக்கச் செய்யப்பட்டதாக ஆய்த்தியமலை பொலிஸார் தெரிவித்துள்ளார்.


ஆய்த்தியமலை பொலிஸ் பிரிவில் மணிபுரம் கிராமத்திலுள்ள ஒருவரின் காணியை "டோஸர்" கொண்டு சுத்தம் செய்யும்போது அதிசக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டுகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு குண்டுகளும் பத்து கிலோகிராமுக்கு அதிகமான எடையைக் கொண்டு காணப்பட்டதாகவும் அக்குண்டுகளை இராணுவத்தின் குண்டு செயல் இழக்கும் குழுவினரின் உதவியுடன் அவ்விடத்திலேயே செயலிழக்கச் செய்ததாகவும் ஆய்த்தியமலை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# முதுமையை தள்ளிவைப்போம்



## இன்று முதியோர் தினம்



முதுமை வாழ்வின் நியதியானது முதுமை என்பது அனுபவங்களையும் அவலங்களையும் கொண்டது. முதுமையை சகலரும் வாழ்த்தி வரவேற்றுக் கொள்வதில்லை. போ என்றால் போய் விடக்கூடியதும் அல்ல. முதுமை வாழ்வில் தளர்ச்சி, விரக்தி, நோய், சோர்வு முதலியவற்றை தருவதாக எல்லோராலும் கருதப்படுகின்றது. இத்தகைய முதுமையை தள்ளிப் போடுவது என்பது இயலுமான காரியமாகுமா? அதனை தள்ளிப்போடுதல் முடியுமா?

இளமைக் காலத்தில் ஒருவனுக்கு ஏற்படும் நோய், வறுமை, ஏழ்மை, கடின உழைப்பு முதலியன அவனை முதியவனாக மாற்றி விடுகின்றது. முதுமைத் தோற்றம் உடையவனாகி இவ்வாறான இயல்புடையவன் காணப்படுகின்றான். நாம் தள்ளிப்போட நினைக்கும் முதுமையும் இவ்வாறான இயல்பினதே. இளமைக்காலம் என்பது சுகபோகங்களை உடையதாக விளங்குகின்றது.

இத்தகைய சுக போகங்களை அனுபவிக்க முடியாத ஒரு தளர்வு நிலையையே பொதுவாக முதுமை என அழைக்கப்படுகின்றது. இத்தகைய தளர்வு நிலையை முதுமையைத் தள்ளிப் போடுதல் என்பது சாத்தியமான ஒன்றாகவே இன்றைய உலகில் காணமுடிகின்றது. நோய்இன்றி வாழ பலவழிகள் காணப்படுகின்றன.

ஆரோக்கியமான மனித வாழ்விற்கு அடிப்படையான விடயங்கள் பல உள்ளன. சங்க இலக்கியம் ஒன்றில் நரை, திரை, மூப்பு என்கின்ற விடயங்கள் தோன்றாமைக் குரிய காரணத்தை கூறும் பாடல் ஒன்று இடம்பெறுகின்றது. நல்ல மனைவியும், பிள்ளைகளும் உறவினரும் கிடைத்தமை முதுமை தவறாது தடுத்தது என்னும் இளமையோடு இருக்க வைத்தது. என்கின்ற கருத்தில் அமைந்த பாடல் இடம்பெறுகின்றது. தினம் தோறும் உதிக்கின்ற சூரியனோடு நாம் ஒவ்வொருவரும் புதிதாக பிறக்கின்றோம் என்கின்ற சிந்தனையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். நமக்கு இறைவனால் இருபத்து நான்கு மணி நேரம் தரப்பட்டிருக்கின்றது. என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்த இருபத்துநான்கு மணிநேரத்துள் நாம் நமக்கு ஏற்பட உள்ள முதுமையை நினைத்து எவ்வளவு நேரம் கலங்குகின்றோம். பிறர்க்கு பயன் உடைய வேலைகளை எவ்வளவு நேரம் செய்கின்றோம் என்பவற்றை சிந்தித்து செயற்பட வேண்டும். மனித வாழ்வில் மனிதனால் படைக்கப்பட்ட பணம் அல்லது பொருள் இல்லையே என்ற கவலை காரணமாக ஒருவன் விரைவிலேயே முதுமை அடைந்தவனாகின்றான். முதுமை காரணமாக பிறரில் தங்கிவாழும் சூழல் ஏற்படுகின்றது. இந்நிலையில் பிறரது வெறுப்புக்கும் பிறரால் ஒதுக்கப்படுவதற்கும் ஏதுவாகின்றது. இந்நிலையில் முதியோர் இல்லங்கள் இத்தகையவர்களின் வாழ் விடங்கள் ஆகின்றன. தன் உறவினர்களோடு வாழத் துடிக்கும் முதியவர்களை இடைஞ்சல்களாக கருதி முதியோர் இல்லங்களுக்கு தள்ளி விடுகின்ற குழந்தைகளை காண முடிகின்றது. பிறரில் தங்கி வாழுகின்ற நிலையை மாற்றி பிறர் நம்மில் தங்கி வாழ வழிவகுக்கின்ற செயல்களை செய்யும் போது முதுமை என்பது சுமையாகாது. சுகமான அனுபவமாக மாறி விடுகின்றது. இத்தகைய முதுமையை வர வேற்று துன்பம் தரும் சோர்வைத் தரும், பிறரில் தங்கி வாழச் செய்யும் முதுமையை தள்ளிப்போக வைப்பது என்பதை விட அண்மைக்கும் வராது தடுக்க வேண்டியது அனைவரது கடமையும் ஆகின்றது.

-தொகுப்பு-பூஞ்செட்டு-

# புலம்பெயர்வாழ் மக்களால் மாணவர்களுக்கு உதவி




(பாண்டியன்குளம்)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மிகவும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக 25 மாணவர்களுக்கு தனியார் ஒருவர் நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மிகவும் வறிய மாணவருக்கு 1000 ரூபாய் வீதம் 25 ஆயிரம் ரூபாய் வழங்க புலம் பெயர்ந்து நோர்வே நாட்டில் வசிக்கும் ஒருவராலும் பாலிநகர் பகுதியில் வசிக்கும் பிரபல தொழில் அதிபர் கி. சடாச்சரநாதன் என்பவரால் பல்கலைகழகம் சென்று கல்வி கற்கும் இரு மாணவருக்கு 5000 ஆயிரம் ரூபா வீதம் பத்தாயிரம் தொடர்ந்து வழங்க முன்வந்துள்ளார்.

அண்மையில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மாணவர்களுக்கான நிதியுதவியினை வழங்கி வைத்தார். இந்நிகழ் வில் மாந்தைகிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் உட்பட சமூக சேவை உத்தியோகத்தர் க.குணசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பலரும் கலந்து கொண்டனர். (140)

# சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சட்டமா அதிபர் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுருக்கெழுத்தாளர் iiiஆம் வகுப்பின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பதவிகளாகும்.

விண்ணப்பங்கள் 25ஆம் திகதிக்கு முன்னர் சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த.பெ.இல 502, கொழும்பு 12 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும் கடித உறையின் இடது மேல் மூலையில் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு 2013 என குறிப்பிடப்படல்வேண்டும்

கல்வித்தகைமை க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் ஏதாவது ஒரு மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் க.பொ.த (உ/த) தரத்திலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் தொழில் தகைமைகளும், அனுபவ தகைமையும் தேவைப்படும்.

வயது 18இற்கும் 30 இற்கும் இடைப்பட்டவராகவும் பதவி நிரந்தரமானதாகவும் ஓய்வூதியற்குட்பட்டதாகும். பரீட்சை நவம்பர் 2013இல் கொழும்பில் இடம்பெறும்.

எழுத்துப் பரீட்சை பொது விவேகம், பொது அறிவு வினாப்பத்திரமாகவும், தொழில் பரீட்சையாக சுருக்கொழுத்து சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவையாகும் மேலதிக விபரங்களுக்கு 27.09.2013 அரச வர்த்தக மானியைப் பார்வையிடலாம்.(105)

# எதிர்கால தலைவர்களான சிறுவர்களை பாதுகாப்போம்.

எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகை காப்பாற்றுவதற்கு தயாராகும் பாது காவலர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர் கள். இச்சிறுவர்களிடையே புரிந்துணர்வையும் பொது நிலைப் பாட்டையும் ஏற்படுத்து வதற்காக சர்வதேச சிறுவர் தினம் ஐக் கிய நாடுகள் அவையினால் (unicef) 1954 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கமைய யுனிசெப், யுனெஸ்கோ மற்றும் சேவ் த சைல்ட போன்ற அமைப்புக்கள் பல்வேறு செயற்திட்டங்களை முன்வைத்து செயற்பட்டுவருகின்றன. 18 வயதிக்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனம் வரையறை செய்துள்ளது.

இன்றைய தினம் (ஒக்டோபர் 1 ஆம் திகதி) சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. இளமையில் கல் சிலையில் எழுத்து எனும் வாக்கிற்கமைய தங்கள் காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறான சிறுவர்களை நாம் இன்றைய நாளில் நினைத்துப் பார்க்க வேண்டும். இதற்காக நாம் அவர்களுக்காக பிரார்த்திப்பது நம் கடமையாக இருக்கின்றது.

இந்நிலையில் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எனும் நோக்கோடு அவர்களை பாதுகாப்பது ஒவ்வொருவரது



**(இன்று சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது)**

சிறுவயதிலேயே சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகிறது. அதற்கமைய உலகளாவியரீதியில் ஏற்படுகின்ற யுத்தங்கள்,உள்நாட்டு பிரச்சினைகள் என்பன அதிகளவில் நேரடியாக சிறுவர்களேயே பாதிக்கிறது. துஷ்பிரயோகம் உலகமெங்கிலும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இதனை இல்லாமல் ஒழிக்க பல நாடுகள் பல சட்டங்களை கொண்டுவந்தாலும் இது ஓய்ந்த பாடில்லை. பல காரியங்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுவதால் பிற்காலத்தில் அவர்கள் ஒரு வன்முறையாளர்களாக வருவதற்கான சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

சிறுவர்களின் அடிப்படை உரிமையான கல்வியை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். பல சிறார்கள் இன்றைய நாளை சந்தோஷமாக கொண்டாடினாலும், நாம் அறியாத பல சிறு உள்ளங்கள் வேதனையிலும், கஷ்டத்திலும், சித்திரவதைகளிலும் கடமையாகும். உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கான அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படுகிறதா என்பது. கேள்விக் குறியான விடயமாகத்தான் இருக்கின்றது. உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களாவர். அந்தவகையில் எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் இருக்கும் சிறுவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய சிறுவர்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு ஒவ்வொரு சமூகமும் பொறுப்புக் கூறவேண்டிய கட்டாயத்திலிருக்கிறது. இந்தப் பூமியில் வாழ்கின்ற மனித இனமான நாம் எதிர்காலத்திலும் நல்லதொரு உலகை கட்டியெழுப்ப வாய்ப்பளிக்க வேண்டியது கட்டாயமானதாகும். எனவே சிறுவர்களுக்கெதிரான நடவடிக் கைககளை தடுத்து அவர்களை பாதுகாத்து நாளைய உலகத்தில் நலமாய் வாழ வழிவகுப்போம்.

**- மதி**

# பதிவிறக்கப் பெட்டகம்

சுதந்திர நாளில் தமிழ்த் தொலைக்காட்சிகள் ஒளிபரப்ப இருக்கும் சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை நினைக்கும்போது புல்லரிக்கின்றது. நாலாந்தரமான தமிழ் சினிமாக்களுடன் தொடர்புடைய நடிகர்களையும் நடிகைகளையும் கூட்டி வைத்து அடிக்கப் போகின்ற லூட்டிகளுக்கும் அக்கப்போர்களுக்கும் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும என்ன தொடர்பு உள்ளது? இந்தக் காட்சி ஊடகக்காரர்களுக்குக் கொஞ்சம்கூட நாணம் இருக்காதா? யாருக்கும் வெட்கம் இல்லை என்பது கூட ஒருவகையில் நுண் அரசியல் சார்ந்ததுதான். **– ந.முருகேசபாண்டியன்**

'சென்னையில் ஒரு மழைநாள்' என்ற படம் ஓடிக்கொண்டிருந்தது ரீவியில். இதயமாற்று சிகிச்சைக்காக சென்னையிலிருந்து இதயத்தை வேலூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்கின்றார்கள். காவல்துறை கமிஷனராக வரும் சரத்குமார் சொல்கின்றார். கடுமையான மழை. ஹெலிகொப்டரில் செல்ல முடியாது. காரில்தான் செல்ல வேண்டும். சேரன் காரை ஓட்டுகின்றார். சேரன் சென்னையில் வண்டியை கிளப்பும்போது மழை பெய்கின்றது. அடுத்து வேலூர் செல்லும் வரை வழியில் ஒரு சொட்டு மழை இல்லை. போதாக்குறைக்கு வழியில் ஒரு புழுதிக்காட்டில் பிரசன்னாவிற்கும், சேரனுக்கும் சண்டை நடக்கின்றது. கார் செல்லும் போது செம்மண் புழுதி பறக்கின்றது. போதாதற்கு கானல் நீரை வேறு லோங் ஷொட்டில் காட்டுகின்றார்கள். அனல் தகிக்கும் இடத்தை காட்டுகின்றார்கள். என்னடா இது பங்குனி வெயில் எரிக்கிறது. இந்த கமிஷனர் பனிமூட்டம் என்று சொல்கிறாரே என்று குழப்பம். சரியென்று சனலை மாற்றினேன். அந்த சனலில் 'காற்றில் எந்தன் கீதம்' ஜானி படத்தின் பாடல் சரியாக அதே நேரத்தில் ஓடியது. ஆயிரம் முறை கேட்ட பாடல். மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். ரஜினி மழையில் நனைந்து ஓடி வருகின்றார். அடுத்த பிரேமில் திடீரென காவல்துறையினர் ஓடிவந்து ரஜினியை தாக்குகின்றார்கள். ஒருத்தர் உடையிலும் ஈரம் இல்லை. அந்தக் காட்சியில் மழையே இல்லை. அடுத்த பிரேமில் மீண்டும் மழை. சரியென்று சற்று நேரம் கழித்து மீண்டும் சனல் மாற்றினேன். சென்னையில் ஒரு மழைநாள். சேரன் வேலூரிலிருந்து சென்னை திரும்புகின்றார். மழை கொட்டுகின்றது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

**– விநாயக முருகன்**

மலையாளப் படங்களில் எப்போதும் என்னைக் கவர்வது... அதில் இருக்கும் நேட்டிவிட்டியும்... பெண்களின் பாத்திரப் படைப்பும் தான்... ஃபகத் ஃபாஸிலின் காதலியாக சில காட்சிகளில் மட்டுமே வரும் அந்தப் பெண் ஒரு ஓவியராக வருவார்... ஒரு கம்யூனிஸ்டை, ஒரு நாடக நடிகனை அப்படியாக கலையோடு சம்பந்தப்பட்ட ஒரு பெண் தான் ஈர்க்க முடியும் இல்லையா? தவிர்க்கவே முடியாமல் தமிழ்ப்பட லூசுப் பெண் கதாநாயகிகளை இந்த இடத்தில் ஒப்பிடுகிறேன்... தனக்கென சுயமும், செய்வதற்கு ஒரு வேலையும் கூட இல்லாமல் ரோட்டில் சுற்றித் திரியும் பரிதாபமான பெண்கள்..

**– பிரியா தம்பி**

பழைய தமிழ்த் திரைப்படங்களில் இது போன்ற காட்சியொன்றை நிச்சயம் நீங்கள் பார்த்திருக்கலாம். அப்பாவியான பரிதாபமான கணவர் பாத்திரம் ஒன்றிருக்கும். அவருக்கு மிகவும் அடாவடியான, கொடுமையான, மனைவி பாத்திரம் ஒன்றிருக்கும். பிரதான கதாபாத்திரங்களை இந்த அடாவடி பாத்திரம் பயங்கரமாக கொடுமைப் படுத்தும். பார்க்கும் நமக்கு பயங்கரமாக கோபம் வரும். கணவர் பாத்திரம் கையறு நிலையில் பரிதாபமாக எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்கும். முடிந்தால் மனைவிக்கு தெரியாமல் மறைமுகமாக நகைச்சுவையும் செய்யும்.

சுமாராக கிளைமாக்சுக்கு முந்தைய காட்சியில் அதுவரை மிக்சர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் கணவர் பாத்திரத திற்கு எங்கிருந்துதான் கோபமும் தைரியமும் வருமோ தெரியாது. யாரையோ ஏசிக் கொண்டிருக்கும் மனைவியை தடுத்து நிறுத்தி பளாரென்று ஓர் அறை விடும். அதுவரை கோபத்தை அடக்கிக் கொண்டிருந்த பார்வையாளர்களுக்கு ஒரு வடிகால் கிடைக்கும். 'அப்பாடா, இப்பவாவது தைரியம் வந்ததே' என்று. தன்னிச்சையாக அப்பாவி பாத்திரத்தின் மீது பிரியமும் சுரக்கும்.. இதற்காகவே இயக்குநர்கள், இந்தப் பாத்திரங்களை எதிரெதிராக கறுப்பும் வெள்ளையுமாக உருவாக்குவார்கள்... **– சுரேஷ் கண்ணன்**




# மான் தனது கொம்புகளை உதிர்ப்பது எப்போது?



மான் தனது எலும்புகளைத் தலையில் கொம்புகளாகக் கொண்டிருக்கும் ஒரு விலங்கினமாகும். மான் கொம்புகள் அதன மண்டையோட்டின் (skull) ஒரு பகுதியாக விளங்குகின்றன.


கடினமான, எலும்புகளாலான, கூர்முனை கொண்ட மான்கொம்புகள அபாயமான ஆயுதங்களாகச் செயற்படுபவை. மான்கள் தம் கொம்புகளைக் கொண்டு தம் இணைகளுடன் சண்டையிடவும் குழுவில் தலைமையை நிலை நாட்டவும் செய்கின்றன.

மிதமான மற்றும் குளிர்ந்த சூழலில் வாழும் மான்களுக்கு குளிர்காலத்தில் கொம்புகள் உதிர்ந்து இளவேனிற் காலததில் புதிய கொமபுகள் முளைக்கத் தொடங்கும். வெப்பப் பகுதியில் வாழும் மான்களுக்குக் கொம்புகள் உதிர்வதும் புதிதாக முளைப்பதும் இதற்கு நேர்மாறாக நடைபெறுகின்றன.

புதிதாக முளைக்கும் கொம்புகள் மென்மையாகக் கொழுந்து போன்று அமைந்து விரைவாக வளரும். மான் கொம்புகளைச் சுற்றியுள்ள மெல்லிய தோல் போன்ற போர்வையில் இரத்த நாளங்கள் அமைந்திருக்கும் இவை கொம்புகள் விரைந்து வளர உதவுகின்றன.


இந்தத் தோல் போர வையில் சிறிய மென்மையான முடிக் கற்றை அமைந்து வெல்வெட் (velvet) போர்வை போன்று காட்சியளிக்கும். மான கொம்பு வளர்ச்சியடைந்து முழுமை பெற்ற பின்னர் இந்த வெல்வெட் அமைபபு உலர்ந்து போகும் இந்நிலையில் மான்கள் இவ்வமைப்பைத் தரையில், மரத்தில் அல்லது புல்வெளியில் தேய்த்து கொம்புகளிலிருந்து நீக்கிவிடும்.

எல்லா மான் கொம்புகளிலும் கிளைகளும் அமைந்திருககும். ஒவ்வொரு பக்கக் கொம்பும் ஐந்து அல்லது ஆறு கிளைகளைக் கொண்டிருக்கும். சில மான்களின் கொம்புகளில் மிகுதியான கிளைகளும் இருப்பதுண்டு.



# பசுவுக்கு நான்கு வயிறுகளா?

***பசுவுக்கு உண்மையில் நான்கு வயிறுகள் உள்ளனவா?*** கால்நடைக்கு இருப்பது ஒரே வயிறுதான் ஆனால் இவ்வயிற்றில் நான்கு அறைகள் (compartments) உள்ளன. இவ்வகை வயிற்றின் மூலம் விழுங்கப்பட்ட உணவு மீண்டும் வாய்க்குக் கொண்டு வரப்பட்டு மெல்லப்படுகிறது (chewed) மெலலப்பட்ட உணவு பின்னர் மீண்டும் விழுங்கப்படுகிறது இச்செயலே அசை போடுதல் என்பதாகும். இவ் வகை விலங்கினம் அசை போடும் விலங்கினம் (ruminant) என அழைக்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட நான்கு அறைகள் “அசையும் இரைப்பை (rumen)” “ரெட்டிகுலம் (reticulum)” “இழை இரைப்பை (omasum)”, மற்றும் “செரிமான இரைப்பை (abomasum)” என அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு அறையிலும் வயிற்றிலுள்ள பாக்டீரியா மற்றும் ஈஸ்ட்கள் போன்ற ஏராளமான நுண்ணுயிரிகளின் உதவியுடன் உணவு செரிமானமாகிறது.




நான்காவது அறையே உண்மையான வயிறு ஆகும். மனிதர்கள் மற்றும் பிற பாலூட்டிகளின் வயிற்றில் நடைபெறுவது போன்ற செரிமானச் செயற்பாடு இங்கேதான் நடைபெறுகின்றது. ஆடு மாடுகள் போன்றவற்றிற்கு வாயின் மேற்புறத்தில் முன் பற்கள் இருப்பதில்லை.

மாறாக இப் பகுதியின் ஈறு தடிமனான அட்டை போன்று அமைந்து உணவை மெல்லுவதற்கு உதவுகிறது. தியான கிளைகளும் இருப்பதுண்டு.

# அறிவியல் வினாக்களும், விடைகளும்

**கேஸ் (gas) திறந்து பற்ற வைத்த உடனே அடுப்பு நமது உபயோகத்துக்கு தயாராகி விடுகிறது. வெளியே வரும் கேஸ் மட்டும் ஏன் எரிகிறது? சிலிண்ட ரீன் உள்ளே இருக்கும் கேஸ் ஏன் பற்றிக் கொள்வதில்லை?**

நாம் சமையலுக்கு உபயோகிக்கும் கேஸ் என்-பியூட்டேன் (N-BUTANE) என்ற எரிபொருள். எந்த ஒரு எரிபொருளாக இருந்தாலும், அது எரிய வேண்டுமானால் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை. ஒன்று அந்த எரிபொருள் தான் பற்றிக்கொள்ளும் வெப்பநிலையை (Ignition point) அடைய வேண்டும். இரண்டு எரிவதற்குத் தேவையான பிராண வாயு, ஆக்சிஜன் போதுமான அளவில் கிடைக்க வேண்டும். நமது கேஸ் அடுப்பில் என்ன நிகழ்கிறது? சமையல் வாயு பற்றிக் கொள்ளும் வெப்பநிலை 360°C ஆகும். சிலிண்டர் வால்வைத் திறந்ததும் கேஸ் வெளியேறி அடுப்பின் பர்னர் பகுதியை வந்தடைகிறது. அப் போது ஒரு தீக்குச்சியால் அல்லது லைட்டரால் பற்ற வைக்கும் போது சமையல் வாயு 360°C வெப்பத்தை அடைந்து பற்றிக்கொள் கிறது அடுப்பைச் சுற்றிலும் தேவையான அளவு ஒக்சிஜன் இருப்ப தால் தொடர்ந்து எரிகிறது.

சிலிண்டரின் உள்ளே உள்ள கேஸ் பற்றிக்கொள்ள வெப்பமும், ஆக்சிஜனும் சிலிண்டரின் உள்ளே செல்ல வேண்டும். பர்னர் பகுதியிலிருந்து வெப்பம் ரப்பர் டியூப்களைத் தாண்டி சிலிண்டரின் வாய் பகுதியை அடைநது உள்ளே பரவவேணடும். இது முற்றிலும் சாத்தியமில்லை. சிலிணடரின் உள்ளே உள்ள கேஸ் மிக மிக உயர்ந்த அழுத்தத்துடன் உளளே அடைக்கப்பட்டுள்ளது. எனவே சிலிண்டரின் உள்ளே இருக்கும் அழுத்தம் வெளியிலுள்ள சுற்றுப்புற அழுத்தத்தை (Athmospheric Pressure) பல மடங்கு அதிகம். எனவே வெளியிலிருந்து அழுத்தம் குறைந்த ஒக்சிஜன் அழுத்தம் அதிகம் உள்ள சிலிண்டரின் உள்ளே நுழைவது சாத்தியமில்லை.

இந்த இரு காரணங்களால் சிலிண்டரின் உள்ளே இருக்கும் எரி பொருள் பற்றிக்கொள்ளும் வாய்ப்பே இல்லை.

**பாலைக் காய்ச்சும் போது அது ஏன் பொங்கி வருகிறது?**

பால் என்பது தண்ணீர், புரதம், மாவுச்சத்து, கொழுப்பு மற்றும் பல தாதுப் பொருட்கள் அடங்கிய கலவை. பாலில் உள்ள கொழுப்பின் அடர்த்தி (DENSITY) தண்ணீரின் அடர்த்தியை விட குறைவாக இருப்பதால் பாலின் மேற்ப் பரப்பில் அவை மிதக்கின்றன. தண்ணீரின் கொதிநிலை வெப்பம் 100°C. ஆனால், பாலில் உள்ள கொழுபபு 50° உல் உருக ஆரம்பித்து விடும். பாலை காய்ச்சும்போது 50°C நிலை வரும்போதே பாலில் உள்ள கொழுப்பு உருகி, மேற்ப் பரப்பில் வந்து ஒரு மெல்லிய படலமாகப் படர்ந்து நிற்கிறது. எந்த ஒரு திரவத்தைக் கொதிக்க வைத்தாலும் அந்தத் திரவத்தி லிருந்து காற்றுக் குமிழ்கள் தோன்றி மேலே கிளம்பி வரும்.

பால் சூடாகும் போதும் காற்றுக் குமிழ்கள் உருவாகி மேலே வரும். மேற்ப்பரப்பில் கொழுப்புப் படலம் ஏடாகப் படிந்து இந்தக் குமிழ்கள் வெளியேறுவதை தடை செய்வதால், சிறு சிறு குமிழ்கள் ஒன்றாக இணைந்து பெரிய காற்றுக் குமிழ்களாக மாறி அந்த ஏட்டுப் படலத்தோடு மேலெழும்பி பொங்கி வழிகிறது.

**தொடர்ந்து துழாவிக்கொண்டே இருந்தால் பால் பொங்கி வழிவதில்லை ஏன்?**

பாலை ஒரு கரண்டியால் தொடர்ந்து துழாவிக் கொண்டேயிருந்தால் மேற்ப் பரப்பில் ஏடு படிவது தடுக்கப்படுகிறது. தோன்றும் காற்றுக் குமிழகள் வெளியேறிவிடும் எனவே பால் பொங்கி வழிவது தடுக்கப்படுகறது.

**தண்ணீரைக் காய்ச்சினால் ஏன் பொங்குவதில்லை?**

தண்ணீரில் கொழுப்போ, மாவுச்சத்தோ, புரதங்களோ இல்லை. எனவே மேற்ப்பரப்பில் ஏடு எதுவும் படிவதில்லை. காற்றுக் குமிழ்கள் தடையின்றி வெளியேறலாம். எனவே நீரை கொதிக்க வைக்கும் போது அது பொங்குவதில்லை.

**பீங்கான் அல்லது கண்ணாடி கப்பில் சூடான பானங்களை விடும் போது சூட்டினால் கப் உடைந்து போவதுண்டு ஏன்?**

வெப்பத்தால் பொருட்கள் விரிவடையும். கண்ணாடிக் கப்பில் சூடான பானங்களை ஊற்றும்போது, கப்பின் உட்பகுதி முதலில் வெப்பத்தால் விரிவடைகிறது. வெப்பம் சிறிது சிறிதாகப் பரவி சற்று தாமத மாகவே வெளிப்பகுதி விரிவடையும். சூடு அதிகம் இருந்தால் உட்பரப்பு முதலில் விரிவடைந்து, வெளிப்பரப்பு விரிவடையத் தாமதமாகும் போது கப் உடைந்து விடுகிறது.

# முதல் இடம் பிடித்த அதிசயம்

1) நவீன உலகின் ஏழு அதிசயங்களுள் முதல் இடம் பிடித்த அதிசயம் எது?
**தாஜ்மஹால் 2007 இல் தேர்வு செய்தனர.**

2) மக்கள் அமைதியாக வாழச் சிறந்த நாடு எது?
**நோர்வே**

3) காந்திஜியை தபால் தலையில் இடம் பெறச்செய்த முதல் அயல் நாடு எது?
**அமெரிக்கா (1949 இல்)**

4) குளிர்காலத்தில் எந்த நிற ஆடைகள் அணிந்தால் குளிர் விறைக்காது?
**மஞ்சள் நிற ஆடைகள் (வெப்பத்தினைத் தக்க வைத்திருக்கும்)**

5) பொழுது போக்கு கடற்கரைகள் அதிக எண்ணிக்கையில் உள்ள இந்திய மாநிலம் எது?
**கோவா**

6) பைபிள் படி உலகில் தோன்றிய முதல் பெண் யார்?
ஏவாள் **(Eve)**

7) மத்திய தரைக்கடலையும் சாக்கடலையும் பிரிக்கிற வளைவில் அமைந்துள்ள முக்கிய நகரம் எது? ஜெருசலேம்

8) கிரேக்கப் புராணக் கதைப்படி, உலகில் தோன்றிய முதல் பெண் யார்?
**பாண்டோரா (Pandora)**

9) இரண்டு நாட்கள் மட்டுமே போப்பாண்டவராக இருந்து ஆட்சி செலுத்தியவர் யார்?
**இரண்டாம் ஸ்டபன் (752 ஆம் ஆண்டில்)**

10) இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே என்று பாடலை எழுதியசினிமாக்கவிஞர் யார்? பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

11) தாய் மொழியிலேயே அதிகம் உரையாடும் ஆர்வமுள்ள மக்கள் வாழும் இந்திய மாநிலம் எது? மேற்கு வங்காளம் (வங்க மொழியில)

12) ஆசியச் சிங்கங்களைப் பாதுகாக்கும் இந்திய தேசியப் பூங்கா எது?
கிர்வனவிலங்குகள் சரணாலயம், ஜுனோகாத் (குஜராத)

13) உலகப் பயணம் செய்த முதல் கப்பலின் பெயர் என்ன?
விக்டோரியா

14) ஒரே ஒரு பைசாவுக்கு விற்கப்பட்ட முதல் இந்தியப் பத்திரிகை எது?
சுலப சமாசார் (1870 இல் வங்கமொழியில்)


15) ரெட்மீட் என்றால் அது எந்த இரு விலங்குளின் இறைச்சியைக் குறிக்கும்?
ஆடு - மாடு

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**English** **M.Balasubramaniam**

## Answer all the questions

From forest to paper



**1) The pictures show the process of making paper, Match the pictures with the process. Write the correct Number in the cage, One is done for you.**

a. Wood chips are usually cooked in a chemical solution inside a closed tank. The emical mixture changes the wood chips into pulp.

b. Logs are debarked in a spinning drum. As the bark is removed the logs are cut into small sections.

c. A lumber company cuts trees into logs, The logs are taken to a mill. Where they will be made into paper.

d. The logs sections are cut into pieces or chips by chipping machine

e. Water is squeezed out of the wood pulp. Then rollers dry and dress the pulp into their sheets of paper.

f. The wood pulp is washed. Unwanted material such as knots and cinders are screened out.

**02) Match the right word with their meaning on the left and wirte them in the boxes.**

ossy / Elaborate / Controversial / Frugality / Legendry.

a) Carefully worked out

b) Buildings that are very old

c) Having various opinions

d) Extremely beautiful

e) some africons lived in a very thrift

**03) The notice given is about a lost of brief case for which the details are een**

**Situation**

Lost, Brown plastic brief case having three compartments and containing a text book, exercise books note and NIC card two pens red and blue. If found please contact S.M.James peter
111, Bonjean Road, Colombo - 13

Write a similar one for the wristwatch you lost in your school playground.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

**04) Some headings of some forms are issued at the G.P.O for various uses are seen underneath. Read them and write down the correct unmber for the purpose stated.**

1. DEPARTMENT OF TELECOMMUNICATION T D /1
This form is for inland and Indian telegram only

2. APPLICATION FOR INLAND TELEGRAPH MONEY ORDER P.O.C. 0/3

3. APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER P.O.C. /1

4. SRI LANKA TELEGRAPHS PREFIX .......................... FOREIGN TELEGRAM CODE ..........................

5. APPLICATION FOR A LICENCE TO POSSESS AND. OPERATE WIRELESS APPARATUS OFR THE PURPOSE OF BROADCASTIN IN AND FOR A TELEVISION SET. LISTENING.

6. APPLICATION FOR TRANSFER OF BROADCAST RECEIVING SET LICENCE

1. Mr. Shegar wants to send money urgently to his son at Peredeniya campus, which form will he have to use?
2. Mohan bought a colour T.V. set which form will the post - master give him?
3. You want to send a telegram to Colombo. Write down the number of the form the post - master will give you.
4. You want to send a telegram to your brother in Paris. Which form will the Post master give you. Write down the number.
5. You have sold your Radio set to a friend which form will you use to transfer the licence?

5) You want to go to the library with a friend of yours. In the absence of none at home. Write a note to you mother for leaving. Include the following

**5) You want to go to the library with a friend of yours. In the absence of none at home. Write a note to you mother for leaving. Include the following**

- The time of your departure
- with whom you are going
- Where and the time you would return home.

**6) a) Write in the oval shapes the word their refers, pertaining to science and technology.**

1) A ship specially military one that can stay under water

2) A system that allows people to send messages to each other thrugh compute

3) A scientific instrument that makes small things look bigger

**b) Who are these people connected with these things**

1) Sewing ------------------------------------------------------------

2) Crimes ------------------------------------------------------------

3) Plants ------------------------------------------------------------

## *PART - II*

**07) Read the following poem and answer the question given below.**

**The Town Child**

I live in the town in a street
It is crowded with traffic and feet.
There are buses and motors and trams
I wish there were meadows and lambs.

The houses all wait in a row
There is smoke every where
That I go
I don't like the noises I hear
I wish there were woods very near

1) Write down the words in the poem, which rhyme.
a) Lambs b) row
2) What are vehicles mentioned in the first verse ------------------------------
3) Where does the child like to live? ------------------------------
4) Write down the line in the poem, which says that there are lots of people in a town ------------------------------
5) Write down the two things that town child hates ------------------------------

**8) Read the Passage and answer the question**

Our National flag is the Lion Flag. It has an emblem of an artistic lion on a red back ground. It has four colours. Yellow, maroon, green and Orange. The lion is holding a sword in its right paw and is facing the left to wards the flag pole, In. the four corners of the flag there are four bo - leaves.

The emblem of the lion is in yellow colour, There are two stripes of green and orange in the lion flag. They are on the left of the flag. They mean the rights of the rights of the minorty races in Sri Lanka. When the flag is hoisted in all state buildings on national days it reminds people of the spirit of the nation. It is one of the oldest flags, in the world, There are rules regarding the use of the national flag laid down by the government. Every citizen of Sri Lanka must stand up in respect when the National flag is hoisted. So do the visitors to this country.

i) What do the stripes stand for?
ii) When is the flag hoisted?
iii) What should every citizen do, when it is hoisted?
iv) How do we respect the flag?
v) Give s suitable title for this?

**09) Given below are same sentences, which show positive and negative aspect of tourism. insert A for positive, B for negative. in the boxes.**

a) Tourism is a big foreign exchange earner ☐
b) Children tend to imitate certain unsuitable behavior patterns of tourists ☐
c) Tourism promotes some things change the local cultural traditions to suit tour ist needs
d) Tourism promotes good understanding between countries.
e) Tourist can have a damaging effect on our culture. ☐

**10) Under line the correct answer in the brackets. Fist one is not underlined**


i) The establishment is re - opened ( active, passive, complex)

ii) I met my principal while I was coming to school ( Main sentence, clause, phrase)
iii) He asked whether my father is retired (Direct speech, reported speech, phrase)

iv) Some of today's children grow up lazy and confused, (adverbial clause, pharasal verb, Noun)
v) Dishonest children always have bed behavior (prefix, noun, suffix)

11) Atted to any one of the following

a) Your are asked to give a speech in english to the students of year 9, 10 & 11 in your School. The Topic is Road Safety write the speech you would give.




**OR**

b) Write a short description of "my idea of peace in a country.
Some information about the :- Country and its people, Why peace is necessary to develop the country, How you hope to achieve, it the results you hope to again.

**MY idea of peace in a country.**

It's a pleasure for me to be at this community center today to speak few words about "my idea of peace in a country. Citizens' upbringing of a country falls on their shoulders. If we want to prosper we must be united.

That unity will show the way to peace. As a matter of fact, if one community is against the other then there will be no progress. In such an atmosphere no man will take the leadership to work for the progress of the country. Instead they will always try to find ways of looking after only their community. At present all the present all the developed countries have gained that position by hard work. If there is no peace can we get together and work "No" There will be all the time many disputes. Finally without our knowledge we will find that the time and the money have been spent for nothing.

Village is the best place to implement that lets forget our past and be honest and will work together by setting an example to te others. As the second step we can be united with the neighboring villages and it can be spread to town. As villagers we must help each other to fulfill their needs. For example during the harveresting period all the villagers can get together and help each other. When there are volunteers you need not spend ofr labour. The volunteers too will be bene fited by acting in way we live peacefully.

Finally I would like to stay my idea of peace in a country is that all the people should be happy and be united.

**Wishing your Success. We'III mett again in te Spoken Classes on Saturay & Sunday - 2002**

Thank you.


Bala Master

**_ The following graph shows the expenditure incurred on different projects of the Social Service Clup of your village. Study the graph and write a description of it. Use 75 -100 words. Include the following:**

1) What the graph represents
2) What information is given horizontally
3) What information is given vertically

**Use the following words to complete and contrast the amount of money spent on the different projects.**

*less, least, many, more, most, equal, nearly, higher*




..................................................
..................................................
..................................................
..................................................

**_ Read the poem and answer the questions given below**

**Cage Bird and Sky Bird**

Cage Bird swung
From an apple tree
And his cage was of silver
And ivory
Nobody can be so happy, so happy,
sang the Cage Bird.

Sky Bird sang
From the a cloudless sky,
And his wings were wide
And bright his eyes
Nobody can be so glad as I;
Sang the sky Bird.

That wild song
To the garden fell
And the Cage Bird heard it,
in his silver cell.
Are you free then, are you truly free?
Cried the Cage Bird.

Sky Bird flew
In the trail of the Sun
And swiftly he soared,
Away from the gerden
Sadly sang the Cage Bird, when the day was done;
Sang the Cage Bird.

*Leslie Narris*

1) Why was the Cage Bird happy?
..................................................

2) The Sky Bird's wings are wide, Why?
..................................................

3) Find another word the poet uses for
(a) cage : ........................ (b) happy : ........................

4) How did the Cage Bird sing at the end of the day? why?
..................................................

5) Write the line which means that the Sky Bird :
a) Sang a natural of uncontrolled song :
..................................................
b) Rose up to the sky quickly :
..................................................

**_ Fill in the balanks using to words in the list below. There are two extra words.**

Do you work to a time table? At school, the answer will be 'Yes' Since (1) ...................... have aclass time table (2) ...................... you which subject to (3) ...................... at a particular time. (4) you work to a (5) ............. at other too? That is an in the (6) ...................... at weekends or during (7) .............. if you don't, write (8) ...................... list of all the (9) .................. you have to do (10) ............. week - home work, preparing for tests etc. Then divide up the time. Leave some time for the activities youreally enjoy doing.

| | | | |
|---|---|---|---|
| a | do | evening | holiday |
| study | telling | this | time table |
| is | work | out | you |

# பூநகரி பிரதேச மக்களுக்கு தாமதமாக கிடைக்கும் தபால்கள்


(முழங்காவில்)

பூநகரிப் பகுதிக்கு கடந்த சில நாட்களாக வரும் கடிதங்கள் மூன்று, நான்கு நாட்கள் தாமதமாகக் கிடைத்திருப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி தெரியவருவதாகவது,

இதுவரை காலமும் யாழ்.பிரதம தபால் நிலையத்தில் இருந்து பேருந்து மூலம் பூநகரி தபால் நிலையத்துக்கு காலை 6 மணிக்கு அனுப்பிவைக்கப்பட்ட தபால் பொதிகள் தற்போது கிளிநொச்சி வரை புகையிரதத்தில் கொண்டு வரப்படுகின்றன. தபால் பொதிகளை கொண்டு வருவதற்கான தொடர பஸ் சேவை இல்லததால் தபால்கள் மூன்று நான்கு நாட்கள் வரை தாமதம் அடைவதாக பொது அமைப்புக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

இது சம்பந்தமாக தபாலக வட்டாரங்களோடு தொடர்பு கொண்டபோது கிளிநொச்சி தபால் நிலையத்துக்கு தபால் புகையிரதத்தில் இருந்து அதிகமாக வரும் பொதிகளை பூநகரிக்கு அனுப்பி வைப்பதற்கான பஸ்சேவைகள்



இல்லாததால் 10 மணிக்குப் பின்தான் பஸ் மூலம் பொதிகள அனுப்பப்படுவதால் ஒரு நாள் கூடுதலாக தாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பிரதம தபால் நிலையத்தின் கீழ் இயங்கும் 9 உப தபால் நிலையங்களுக்கு இப் பொதிகள் அனுப்பப்பட்டு தபால விநியோகம் செய்வதற்கு மேலும் தாமதம் அடையும் நிலை உள்ளது.

கிளிநொச்சியில் இருந்து காலை வேளையில் பொதிகளை அனுப்புவதற்கான பஸ் சேவையை ஒழுங்கு செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(112)

## கிளிநொச்சியில் கேரள கஞ்சா பாரதிபுரத்தில் பெண் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பாரதிபுரம் பிரதேசத்தில் கேரள கஞ்சா வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்கேநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாரதிபுரத்தைச் சேர்ந்த குறித்த பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ 100 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட பெண் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்

# அரசுடன் இணைந்து செயற்பட மலையக மக்கள் முன்னணி தீர்மானம்

மத்திய மாகாண சபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளோம் என மலையக மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

மக்களின் நன்மை கருதியும் காலத்தின் தேவை கருதியும் ஜனாதிபதி மீது வைத்துள்ள நம்பிக்கை ஆகியவற்றினா லேயே ஆளும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல் துறை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண சபை தேர்தல் தொடர்பான முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மத்திய மாகாண சபை தேர்தலில் நாம் தனித்து போட்டியிட்டு ஒரு ஆசனத்தை கைப்பற்றியுள்ளோம். இதன் மூலம் நாம் ஆளும் கட்சியுடன் இணைந்து செயல்படுவதா அல்லது எதிர்கட்சி ஆசனத்தில் அமர்வதா என்ற தீர்மானத்தை நாம் எடுக்க முடியும்.

அதற்கான அங்கீகாரத்தை மக்கள் எமக்கு வழங்கியுள்ளார்கள். ஆனால் நாம் எமது மக்களின் நம்மை கருதியும் காலத்தின் தேவை கருதியும் அரசாங்கத்துடன் இணைந்து மத்திய மாகாண சபையில் செயல்படுவதென தீர்மானித்துள்ளோம். இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு பல முக்கிய காரணங்கள் இருக்கின்றன. நான் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டதன் காரணமாக கடந்த இரண்டு வருடத்தில் 121 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களை எமது மக்களுக்காக முன்னெடுத்துள்ளேன்.

இதற்கெல்லாம் காரணம் நான் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதே. நாம் தேர்தலில் வாக்கு கேட்பது எமது மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பத்றகாக வாகும்.

அதைவிடுத்து எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு குறைகளை சுட்டிக்காட்டுதற்காகவல்ல. ஜனாதிபதி எமக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முழுமையான சந்தர்ப்பத்தை வழங்கி வருகின்றார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்றார்.

# உள்நாட்டு துப்பாக்கியுடன் இராணுவத்தில் பணிபுரிந்தவர் கைது

மொனராகலை பிரதான தரிப்பிடத்திற்கு அருகில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 10 ரவைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், நேற்று முன்தினமிரவு இரவு இவர் கைதாகியிருந்தார்.

சந்தேகநபர் வல்கமுல்ல பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் தற்போது இராணுவத்தில் பணிபுரியும், ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் மொனராகலை நீதவான் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# வெலிக்கடை மோதல் குறித்து 17 பரிந்துரைகள் வைக்கப்பட்டுள்ளன



(கொழும்பு)

கடந்த வருடம் நவம்பர் மாதம் வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளுக்கும் பாதுகாப்பு பிரிவினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலின் போது 27 கைதிகள் உயிரிழந்த அதே வேளை பாதுகாப்பு படையினர் உட்பட 40 பேர் காயமடைந்தனர்.

வெலிக்கடை சிறைச்சாலை மோதல் சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்தது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு பல சந்தர்ப்பங்களில் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விசேட குழு சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திர சிறி கஜதீரவிடம் அறிக்கை ஒன்றை ஒப்படைத்துள்ளது.

இவ் அறிக்கையில் புதிய பரிந்துரைகள் 17 முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும புனர்வாழ்வு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் கையளிக்கப்படவுள்ளது

# சயனைட் குப்பியுடன் கைது

வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு மற்றும் சயனைட் குப்பி ஒன்றுடன் நபர் ஒருவர் வெலிமடை பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.


இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மஹவெவ கந்த, களுபுளுலந்த வெலிமடை பிரதேசத்தை சேர்ந்த 52 வயது மதிக்கத்தக்கவர் என பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேச நபர் தனது வீட்டு சமையலறையிலுள்ள கொங்



கிரீட் பலகையின் மேல் வைத்திருந்த தகரப்பேணியின் உள்ளே இவற்றை மறைத்து வைத்திருந்த போதே பொலிஸார் அவற்றை கைப்பற்றி உள்ளனர்.

சந்தேக நபர் வெலிமடை பொலிஸில் தடுத்து வைககப்பட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



கிளிநொச்சியிலிருந்து-ஆனையிறவு வரையிலான ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. கிளிநொச்சி ஆனையிறவு ரயில் பாதையானது யுத்தத்தினாலும், கடலரிப்பினாலும் அழிவடைந்து காணப்பட்டது. இந்நிலையில் இதன் புனரமைப்பு பணிகள் துரித கதியில் இடம்பெற்றுவருவதைக் காணலாம்.

# தீவிரவாதிகள் வெறியாட்டம்; நைஜீரியாவில் 50 மாணவர்கள் பலி



நைஜீரியாவில் கல்லூரிக்குள் புகுந்த தீவிரவாதிகள் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 50 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்கே குஜ்பா கிராமத்தில் உள்ள யோபே வேளாண் கல்லூரியில் 1,000-இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

அக்கல்லூரி விடுதியில் நேற்று முன்தினம் புகுந்த தீவிரவாதிகள் மாணவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டதில் 50 மாணவர்கள் உயிரிழந்தனர்.

வகுப்பறைகளையும் தீவைத்து தீவிரவாதிகள் கொளுத்தியதாக கல்லூரி நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் முஸ்லிம் தீவிரவாதிகளாக இருககலாம் என பாதுகாப்பு படையினர் சந்தேகின்றனர்.

முஸ்லிம் பிரிவினருக்கு என்று தனி மாகாணம் கேட்டு போராடிவரும் போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கு எதிராக அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்திய விஞ்ஞானி உருவாக்கிய தானியங்கி "ரோபோ"



அமெரிக்காவில் தானியங்கி ரோபோவை இந்திய விஞ்ஞானி உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

பலவிதமான ரோபோக்கள் தயாரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.. இந்த நிலையில் தானாக சிந்தித்து இயங்கும் மிகவும் அதிநவீன ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது.

இதை அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி விஞ்ஞானி டாக்டர் ஜெகநாதன் சாரங்கபாணி தயாரித்துள்ளார். இவர் மிஸ்சோரி பல்கலைக் கழகத்தின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையில் பணி புரிகிறார்.

இந்த ரோபோவினால் படிக்கவும், தன்னைதானே பராமரித்து கொள்ளவும் முடியும். திறனாய்வு செய்து ஒரு வேலையை முழுமையாக செய்து முடிக்கும் திறனும் இதற்கு உண்டு.

இதற்காக எந்திரங்களால் ஆன உணர்வுகளை அறிய கூடிய வகையில் மூளை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் இருந்து உத்தரவிடப்படும் கட்டளைப்படி இந்த ரோபோ மனிதர்களை போன்று துல்லியமாக செயல்படுகிறது. இது விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகச் செய்திகள்

# கறுப்பின பெண்கள் நிராகரிப்பு



பரிஸ் பேஷன் ஷோக்களில் கறுப்பின பெண்கள் நிராகரிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளன.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பரிஸில நடைபெறும் பேஷன் ஷோவில் பல நாட்டு பெண்கள் கலந்து கொள்வது வழக்கம்.

இந்நிலையில் கலந்து கொள்ளும் பெண்களில் கறுப்பு இன பெண்களை அழகியாக தெரிவு செய்வதில்லை என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்தக்குற்றச்சாட்டிற்கு அந்நிகழ்ச்சி பொறுப்பாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஆடை வடிவமைப்பாளர் ஒருவர் கூறுகையில், நாங்கள் நிகழ்ச்சியில் வெள்ளை நிற பெண்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று கூறியுள்ளார்.

மற்றொரு வடிவமைப்பாளரான டாமிரா டொமா, தான் கலரின் அடிப்படையில் தீர்மானிப்பது கிடையாது என்றும், சரியான நபரை மட்டுமே தெரிவு செய்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இனரீதியாக பார்ப்பதில்லை என்றும், அனைவருக்கும் சம உரிமை வழங்கப்படுகிறது என்றும் பேஷன் ஷோ பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்

# அமெரிக்காவுடன் பேச்சு நடத்திய ஈரான் ஜனாதிபதி மீது முட்டை வீச்சு



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் பேசியதற்காக ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி மீது சப்பாத்து மற்றும் முட்டைகளை வீசி எதிர்ப்பை தெரிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானில் கடந்த 1979ஆம் ஆண்டு ஆண்டு இஸ்லாமிய புரட்சி ஏற்பட்ட பின் அமெரிக்காவுடனான உறவு முறிந்தது.

இதற்கிடையே ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரிப்பதாக குற்றம் சாட்டிய அமெரிக்கா, பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இதனால் ஈரானில் எடுக்கப்படும் கச்சா எண்ணெயை, மற்ற நாடுகளுக்கு விற்க முடியாமல் திண்டாடி வருகிறது.

இந்நிலையில் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ஹசன் ரவ்ஹானி, ஐ.நா பொது சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றார்.

அப்போது அணு ஆயுதங்களை தடை செய்வது குறித்து ஐ.நா பிரதிநிதிகளுடன் பேசத் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் தொலைபேசியில் 15 நிமிடங்கள் பேசியுள்ளார்.

அமைதி நடவடிக்கையில், ஆர்வம் காட்டும் ரவ்ஹானிக்கு, அவரது ஆதரவாளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். அமெரிக்க பயணத்தை முடித்து இரண்டு நாட்களுக்கு முன் ரவ்ஹானி தாயகம் திரும்பினார்.

தெஹ்ரான் விமான நிலையத்திலிருந்து ஆதரவாளர்கள் புடை சூழ வெளியே வந்த ரவ்ஹானி மீது ஒருவர் சப்பாத்து வீசினார், இன்னும் சிலர் முட்டைகளை வீசி எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் அமெரிக்காவை சாத்தான் என கூச்சலிட்டு தங்களது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்

# மாட்டுத்தீவன வழக்கில் லல்லுபிரசாத் குற்றவாளி

## மத்திய சிறையில் அடைப்பு

மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே ராஞ்சி மத்திய சிறையில் ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் லல்லு பிரசாத் யாதவ் சரண்டைந்தார்

1990ஆம் ஆண்டு பீகார் முதலமைச்சராக இருந்தபோது அவர் மீது மாட்டுத்தீவன ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டது.

அப்போது பீகாரின் ஒரு பகுதியாக இருந்த தற்போது ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள சாய்பாசா மாவட்ட கருவூலத்தில் மாட்டுதீவனம் தொடர்பான போலி ரசீதுகளை அளித்து ரூ.37.7 கோடி ஊழலில் ஈடுபட்டதாக அவர் மீது புகார் கூறப்பட்டது.

லல்லு பிரசாத் யாதவுடன், பீகார் முன்னாள் முதல் மந்திரி ஜெகன்னாத் மிஸ்ரா, ஐக்கிய ஜனதாதள எம்.பி. ஜெகதீஷ் சர்மா உள்பட 45 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பாக 1996இல் சி.பி.ஐ. தனது விசாரணையை தொடங்கியது. இதையடுத்து 1997இல் லல்லு தனது முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்தார்.

லல்லு மீதான மாட்டுத் தீவன ஊழல் வழக்கு ராஞ்சியில் உள்ள சி.பி.ஐ. தனிநீதிமன்ற நீதிபதி பிரவாஸ்குமார் விசாரித்தார்.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதியை மாற்றக்கோரி ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்திலும் பின்னர் சுப்ரீம் நீதிமன்றத்திலும் லல்லு பிரசாத் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பான மனுக்களை இரண்டு நீதிமன்றங்களும் தள்ளுபடி செய்தது. இதையடுத்து சி.பி.ஐ. தனிநீதிமன்றத்தில் லல்லு தரப்பு சட்டத்தரணி தனது வாதத்தை கடந்த 17ஆம் திகதி முடித்துக் கொண்டார்.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. அப்போது லல்லு பிரசாத் யாதவ் மற்றும் 44 பேர் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.



மாட்டுதீவன ஊழல் வழக்கில் லல்லுபிரசாத் யாதவ் மற்றும் 44 பேரும் குற்றவாளிகள் என்று நீதிபதி பிரவாஸ்குமார் தீர்ப்பு கூறினார்.

இத்தீர்ப்பு வெளியான உடனேயே நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த லாலு பிரசாத் யாதவ், ராஞ்சி பிர்சா முண்டா மத்திய சிறைக்கு சென்று சரணடைந்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தற்போது சிறையில் அடைக்கப்பட்ட லாலுவுக்கான தண்டனை விவரம் வரும் 3ஆம் திகதியன்று வீடியோ கான்பரன்ஸ் மூலம் தெரிவிக்கப்படும்.

மேலும் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போவதாக லாலுவின் மகன்களில் ஒருவரான தேஜஸ்வி கூறியுள்ளார்.

பாரதிய ஜனதா மற்றும் ஐக்கிய ஜனதா தளத்தின் சதியாலேயே லாலு பிரசாத் மீது வழக்கு தொடரப்பட்டதாகவும் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

# ஏவுகணைகளை சுமந்து செல்லும் ஈரானின் ஆளில்லா விமானம்



ஏவுகணைகளை சுமந்து செல்லும் ஆளில்லா போர் விமானங்களை ஈரான் அரசாங்கம் தனது படையுடன் இணைத்துள்ளது.

ஈரான் நாட்டை உளவு பார்ப்பதற்காக அமெரிக்காவால் அனுப்பப்பட்ட சில ஆளில்லா நவீன ரக உளவு விமானங்களை ஈரான விமானப்படை சிறை பிடித்து வைத்துள்ளது.

இந்நிலையில், போர் ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை சுமந்தபடி மணிக்கு ஆயிரத்து 700 கி.மீற்றர் வேகத்தில் தொடர்ந்து 24 மணி நேரங்களுக்கு பறக்கவல்ல ஆளில்லா அதிநவீன போர் விமானத்தை அந்நாட்டின் விமானப்படையுடன் ஈரான் இணைத்துள்ளது.

"ஹித்-129" என பெயரிடப்பட்டுள்ள இந்த போர் விமானம், ஒரே நேரத்தில் சக்தி வாய்ந்த 8 வெடிகுண்டுகள் அல்லது ஏவுகணைகளை சுமந்தபடி வெகு நீண்ட தூரத்தையும் குறுகிய நேரத்தில் சென்றடைந்து, அசையும் மற்றும் அசையா இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஆற்றல்மிக்கது என ஈரான் விமானப்படை வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வவுனியா பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் அபிவிருத்திற்கென தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், மீள்குடியமர்வு பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களின் மீள்கட்டுமானத்திற்கு உதவுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரிடம் நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதன் பிரகாரம் ஐம்பத்து எட்டு (58) இந்து ஆலயங்களுக்கு இவ்வாறு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ள ஆலயங்களின் விபரம் வருமாறு,

குஞ்சுக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், வாரியுடையூர் இலுப்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், மருதோடை ஸ்ரீ கந்தசாமி ஆலயம், பாலமோட்டை புளியடி விநாயகர் ஆலயம், சேமமடு ஆட்காட்டி விநாயகர் ஆலயம், கூமாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மகிழங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஓமந்தை வீரகத்தி பிள்ளையார் ஆலயம், மகாறம்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், ஆறுமுகத்தான் புதுக்குளம் ஸ்ரீ கந்தசாமி ஆலயம், நொச்சிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பூவரசன் குளம் இயங்கராவூர் விக்னேஸ்வரா ஆலயம், பாலமோட்டை நவ்வி ஸ்ரீ ஞானசக்தி வேல்முருகன் ஆலயம், மாதர்பணிக்கர் மகிழங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயம், பண்டாரிகுளம் அருள்மிகு மாடசாமி ஆலயம், கோவில் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கந்தபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கல்நாட்டினகுளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சாந்தசோலை ஸ்ரீ இராமர் ஆலயம், சாந்தசோலை துர்க்கை அம்மன் ஆலயம்,

ஈச்சங்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், சாஸ்திரிகூழாங்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், மதவு வைத்தகுளம் ஸ்ரீ காளியம்மன் ஆலயம், ஆறுமுகத்தான் புதுக்குளம் செங்கராத்திமோட்டை ஆதி விநாயகர் ஆலயம், தோணிக்கல் ஸ்ரீ ஆதி சிவன் ஆலயம்,

சேமமடு ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலயம், சுந்தரபுரம் ஸ்ரீ சர்வ சக்தி விநாயகர் ஆலயம், விநாயகபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், எல்லப்பர் மருதங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சகாயமாதாபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்,

நெளுக்குளம் சந்தி ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயம், வேலவர் சின்னக்குளம் ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம், பெரியவிளாத்திகுளம் ஸ்ரீ வீரசக்தி அம்பாள் ஆலயம், மருக்காரம்பளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கட்டையர்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்,

பணிக்கர் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், தவசிகுளம் ஸ்ரீ ஆதி பிள்ளையார் ஆலயம், கற்பகபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அலயம், சுப்பிரமணியர் வேலன்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், வேலன்குளம் வீதி செக்கட்டிப்புலவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்,

கந்தன்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், நாவற்குளம் ஸ்ரீ வீரசக்தி அம்மன் ஆலயம், தவசிகுளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், புதுக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கோதண்டர் நொச்சிக்குளம் ஸ்ரீ கந்தசாமி ஆலயம்,

நொச்சிமோட்டை கருங்காலியடி பிள்ளையார் ஆலயம், நாம்பன்குளம், ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கோவில்குளம் மருதமடு ஸ்ரீ கந்தசாமி ஆலயம், அலைகல்லுபோட்டகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், சேமமடு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், பேயாடிகூழாங்குளம் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயம்,

ஓமந்தை வேப்பங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பேயாடி கூழாங்குளம், ஸ்ரீ நாகபூசணி ஆலயம், காத்தார் சின்னக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், நெளுக்குளம் உச்சிப் பிள்ளையார் ஆலயம், மணிபுரம் மீனாட்சி அம்மன் ஆலயம், பாரதிபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், செல்வாநகர் செக்கட்டிப் புலவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றிற்கே நிதியொதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

# குழந்தைகளுக்கான பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையுடன் இணைந்த நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள குழந்தைகளுக்கான பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்பிப்பு நிகழ்வு இன்று யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டு கணக்குகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# ஆட்கொணர்வு மனு மீது முல்லையில் விசாரணை

ஐந்து ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நடைபெறவுள்ளது

காணாமல் போனவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்ற ஐந்து ஆர்கொணர்வு மனுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பாரப்படுதததப்பட்டுள்ளன.

காணாமல் போனவர் தொடர்பில் பூர்வாங்க விசாரணையை மேற்கொண்டு அதன் அறிக்கையை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்.

இப்பூர்வாங்க விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (170)

# ஐ.நா.மார்ச் மாத அமர்வில் மனிதஉரிமை முன்னேற்ற அறிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை அமர்வின்போது இலங்கையில் முன்னேற்றமடைந்துள்ள மனித உரிமை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் சில குறைபாடுகள் உள் ளன. எனினும் இதனையும் எதிர் காலத்தில் அரசாங்கம் அமுல்ப டுத்தும்.

அரசாங்கம் திட்டப் பொறிமுறையொன்றைப் பின்பற்றியே செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்விவகார...

யில் செயற்பட்டு வருகிறது. இதனால் சகல உறுப்பு நாடுகளையும் சமமாக நடத்த வேண்டியது அத்தியாவசியமானது.

முன்பு ஒருபோதும் நடந்திராத வகையில் பொதுநலவாய அமைப்பின் கொள்கைளை மீறி, அதற்கு முரணான வகையில் அமைப்பிற்குள் இலங்கைக்கு தண்டனை வழங்குவதற்காக கனேடிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சியானது பொருத்தமற்றதும் தகுதியானதும் அல்ல.

அத்துடன் இந்த முயற்சி பொது நலவாய அமைச்சர்களின் செயற்பாட்டுக்குழுவின் பொது இணக்கத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறு பொதுநலவாய அமைப்பை அரசியல் மயப்படுத்தும் முயற்சிகள் கண்டிக்கப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.டி.பி.க்கு...

அவசியமோ, எவரையும் அச்சுறுத்த வேண்டிய அவசியமோ இல்லை.

வடக்கு மாகாணசபை எமது சபை. அதைப்பாதுகாக்கவே நாம் விரும்புகின்றோம். வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் எமது மக்களின் தீர்மானத்தை புரிந்துகொண்டுள்ளோம். எமக்கு தேர்தல் முடிவுகள் ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. நாம் சிறிதரனின் செயற்பாடுகளையும் தாண்டிக் கிளிநொச்சியில் ஒரு ஆசனத்தை வெற்றி பெற்றிருப்பது சிறிதரனுக்கு திகைப்பையும், எரிச்சலையும் கொடுத்திருக்கலாம்.

அதேபோல் தீவகப்பகுதி மக்கள் எமது மக்கள். நாம் அவர்களுடனேயே வாழ்ந்து வருபவர்கள் அவர்களிடத்தில் ஜனநாயகத்தைப் போதிப்பவர்களும் நாமே. தேர்தல் முடிவுகளையிட்டு எமது மக்களை வெறுக்கும் அநாகரீகமானவர்கள் நாமல்ல. அங்கு இரவில் மதுபோதையில் நடமாடும் கும்பல் மக்களை மிரட்டுவதாக சிறிதரன் கூறியிருப்பது வேடிக்கையாகும்.

இவ்வாறு குற்றச்சாட்டுக்களை கூறியிருக்கும் சிறிதரன் இது தொடர்பில் உரியவகையில் முறைப்பாடுகளைச் செய்ய வில்லை அது ஏன் என்று கேட்கின்றோம்.

சிறிதரனின் இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான விசமத் தனங்கள் எமது மக்களின் கவனத்தை திசை திருப்புகின்ற நோக்கமாகவே கருத இடமுண்டு. எனவே இவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை விடுப்பதை விட்டுவிட்டு இனியாவது அர்த்தமுள்ள அவசியமான பணிகளில் கவனஞ்செலுத்தினால் நல்லது.

கடந்த காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு உண்மைக்குப் புறம்பான பல குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டிருந்தீர்கள். தற்போது ஆளும் தரப்பாக இருக்கும் கூட்டமைப்பினர் பொறுப்பை உணர்ந்து செயற்படுவதே பொருத்தமாக இருக்கும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் மக்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் இவ்வாறான விசமத்தனங்களுக்கு ஒருபோதும் இடம் கொடுக்கவேண்டாம். எவர் மீதாவது தாக்குதல் சம்பவங்களோ, அச்சுறுத்தல்களோ இடம் பெற்றால் அது தொடர்பில் பொலிஸாரிடம் துணிச்சலாக முறையிடுவது அவசியமாகும்.

அவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்கள் குறித்து எமது கவனத்துக்குக் கொண்டுவந்தால் நாம் உடனடியாக பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட எமதுபங்களிப்பைச் செய்வோம் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## முதல்வர்...

கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் பெயர்ப் பட்டியலை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளித்துள்ளார். அதை தொடர்ந்து இருவரும் அமையவுள்ள மாகாணசபை மற்றும் அதனது காரியாலயம் பற்றி ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## பொய்யான...

போது எமது கட்சிசார்பாக வாக்களிப்பு நிலையங்களில் முகவர்களாக பணியாற்றியவர்களை கேலிப்படுத்தியதும் வசை பாடியதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே, அது மட்டுமல்ல கண்டாவளை, முறிப்பு, ஆகிய இடங்களில் எமது ஆதரவாளர்கள் மீது மிக மோசமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

தாக்குதலுக்குள்ளானவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் அத்துடன் இது தொடர்பான முறைப்பாடு கிளிநொச்சி பொலிஸில் செய்யப்பட்டு பொலிஸாரால் தாக்குதலை மேற்கொண்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தி பிணையில் விடுவிக்கப்பட்டுமுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் நடந்ததாக குறிப்பிடப்படும் தாக்குதல் தொடர்பான உண்மை நிலையை அறிவதற்காக விசாரித்தபோது உழவு இயந்திர உரிமையாளர்கள் இருவர் மணல் ஏற்றிவிக்கும் தொழில் பிரச்சினை காரணமாக அடிப்பட்டுக் கொண்டதாகவும் இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே உண்மைநிலை இவ்வாறிக்க முற்றிலும் பொய்யான முறையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தவறான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கியுள்ளார் ஒரு பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் பொய்யான முறையில் தகவல்களை தெரிவிப்பது நல்லதுமல்ல, நாகரீகமானதுமல்ல என்பதுடன் இந்தச் செய்தியை மறுப்பதுடன், வன்மையாக கண்டிக்கின்றேன் என்றுள்ளது.

## பொதுநலவாய...

தனது சக அமைச்சரான ஜீ. எல். பீரிஸுடன் இருதரப்புப் பேச்சு வார்த்தையில் ஈடுபடும் அதே சமயம் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாடு தொடர்பில் ஆராய்வாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பல நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர், கஸகஸ்தானிலிருந்தே இலங்கை வரவுள்ளார்.

இந்திய அமைச்சரின் விஜயத்தினைத் தொடர்ந்து பொதுநலவாய உச்சி மாநாட்டில் இந்திய அரசாங்கம் சார்பில் கலந்து கொள்ளும் உயர்மட்ட அதிகாரி யாரென்பது உறுதி செய்யப்படும்.

பொதுநலவாய உச்சி மாநாட்டில் இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் வருகை உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும் அந்த நாடுகளிலிருந்து பங்குபற்றவுள்ள உயர்மட்ட அதிகாரிகள் யாரென்பது இன்னமும் அறிவிக்கப்படாமலேயேயுள்ளது.

இந் நிலையில் இந்திய வெளி விவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தினைத் தொடர்ந்து இது அறிவிக்கப்படும்.

மேலும் இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் உச்சி மாநாட்டிற்கான தமது வருகையி னையொட்டி இலங்கையில் ஹோட்டல் அறைகள் உள்ளிட்ட பல ஏற்பாடுகளை பதிவு செய்து வைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலமைப்பரிசில்...

பார்வையிட முடியும் என அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

பெறுபேறு பட்டியல்களை இன்று மாலை பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 25 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 3 இலட்சத்து 29 ஆயிரத்து 725 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர்.

இப்பரீட்சை நாடு முழுவதும் 2 ஆயிரத்து 386 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வீதி விபத்தில்...

மாற்றப்பட்டார். எனினும் அவர் மரணமடைந்துவிட்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று இரவு வைக்கப்பட்டிருந்தது. (01, 25, 116)

# தேர்தலுக்குப் பிந்திய வன்முறை கிளிநொச்சியில் கட்டுமீறுகிறது

## கூட்டமைப்பினரின் அடாவடி குறித்து முறைப்பாடு



கடந்து சென்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர். தாக்கப்பட்ட சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் ஆதரவாளர்களே இவ்வாறு தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தாக்குதலுக்குள்ளானவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

தேர்தல் வெற்றியை தொடர்ந்து கிளிநொச்சியில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து வருவதாகவும் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி புதுமுறிப்பு பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் சிலர் தேர்தலின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் சார்பாக தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட சுப்பரமணியம் வேலாயுதம் (வயது - 53) என்பவர் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் அவர் காயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு பின்னர் வீடு திரும்பியுள்ளார் தாக்குதலை மேற்கொண்டவர்கள் கிளிநொச்சி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சுப்பரமணியம் வேலாயுதம் கருத்துத் தெரிவிக்கையில்,

தான் குறித்த தினத்தன்று மாலை 7.00 மணியளவில் புதுமுறிப்பு சந்தியில் உள்ள கடை ஒன்றுக்கு பொருட்கள் வாங்க சென்றிருந்த போது அங்கிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர்கள் சிலர் தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டதாகவும் நான் தோற்றுவிட்டதாகவும் எனது வயதினையும் மதிக்காமல் தகாத வார்த்தைகளில் கேலிசெய்தனர்.

இதனைக் கண்டிக்க முற்பட்டபோதே என்னைத் தாக்கி காயங்களுக்குள்ளாகினார்கள். எனத் தெரிவித்தார்.

வடக்குமாகாண சபைத் தேர்தல் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களில் இடம்பெற்றபோதும் கிளிநொச்சி மாவட்டத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாறு நாகரீகமற்று செயற்படுவதாக புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# இலங்கை, பர்மிய பௌத்தர்கள் வன்முறைகளை தவிர்க்கவேண்டும்

## தலாய்லாமா கோரிக்கை

இலங்கை மற்றும் பர்மா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பௌத்தர்கள் வன்முறைகளை தவிர்க்க வேண்டுமென திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா கோரிக்கை விடுத்துள்ளார். மதம் பற்றிய நம்பிக்கை மிகவும் நல்ல விடயம் என்றபோதிலும் ஏனைய மதங்களையும் மதிக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய மதங்களை மதிப்பதன் மூலம் மதங்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இலங்கையிலும் பர்மாவிலும் முரண்பாடுகள் ஏற்பட்டதாக தமக்கு தகவல் கிட்டியதாகத் தெரிவித்துள்ளார். பர்மாவின் பௌத்த பிக்குகள் பயங்கரவாதிகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# பள்ளிமுனை லூசியாள் தேவாலய செயலாளர் மீது தாக்குதல்

மன்னார் பள்ளிமுனை புனித லூசியாள் ஆலய நிர்வாக சபையின் செயலாளரான லக்ஷ்மன் பிகிராமோ நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான நில்லையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்டவரது சகோதரர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை புனித லூசியாள் ஆலய வீதி வழியாக நிர்வாக சபை செயலாளரான லக்ஷ்மன் பிகிராமோ தொலைபேசி கதைத்துக் கொண்டு சென்ற போது பின்னால் வாகனத்தில் வந்த இனந்தெரியாதோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு கண்மூடித்தனமாக தாக்கியுள்ளார்.

இதன் போது கடுமையான உட்காயங்களுக்குள்ளான நிலையில் ஆலய நிர்வாக சபை செயலாளர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இருககலாம் எனவும் தேர்தல் காலங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளின் எதிரோலியாகவே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# அன்ரன் பாலசிங்கத்தின் மறுஅவதாரமே விக்னேஸ்வரன்!

## அமைச்சர் விமலின் கட்சி வர்ணிப்பு

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறு அவதாரமே விக்கினேஸ்வரன் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

புத்திசாலித்தனமான நுணுக்கங்களை கொண்டு தென் பகுதி மக்களை ஏமாற்றி வரும் அவர், வடபகுதி மக்களை ஈழத்தை நோக்கி வழிநடத்தி வருகிறார் என அந்த கட்சியின் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள ஊடகங்களில் ஐக்கியம், நல்லிணக்கத்தைப் பற்றி பேசும் விக்னேஸ்வரன், தமிழ் ஊடகங்களில் சுயாட்சி, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பற்றி பேசி பிரபாகரனை வழிபாடு செய்கிறார்.

விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் இதே வழியையே பின்பற்றினார். அவர் தெற்கிலுள்ள சிங்கள மக்களுக்கு சமாதானம் பற்றி கூறியதுடன் நயினாதீவுக்கு யாத்திரை வருமாறும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தென் பகுதி மக்களை ஆழ்ந்த நித்திரையில் வைத்து விட்டு தமது நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதே விக்னேஸ்வரனின் திட்டமாகும்.

புத்திசாலித்தனமாக வேலை செய்து, மேற்குலம் மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் தனது சதித்திட்டத்திற்கான நகர்வுகளை விக்னேஸ்வரன் முன்னெடுத்துள்ளார் என்றார்.

### வலி. வடக்கில் மூன்று வீதிகள் புனரமைப்பு

# ஐ.ம.சு.கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

வலி. வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மூன்று வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆறு உறுப்பினர்கள் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

துறைமுகங்கள் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வலி. வடக்கு பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஆறு பேருக்கு தலா 10 இலட்சம் வீதம் 60 இலட்சம் ரூபாவினை மேற்படி அமைச்சு ஒதுக்கியது.

அதன் அடிப்படையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாது கவனிப்பாரற்று இருந்த மல்லாகம் ஞானவைரவர் வீதி, வேதவுடையார் வீதி மற்றும் அளவெட்டி அழகொல்லை வயல் வீதி ஆகிய வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் அப்பிரதேசவாழ் மக்களின் நீண்டகால போக்குவரத்துப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

# சிவப்பு மழை, எரிகல் ஆய்வு; விஞ்ஞானிகளுக்கு பாராட்டு

சிவப்பு மழை மற்றும் அரலகங்வில பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எரிகல் குறித்து இலங்கை விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வு சர்வதேச சமூகத்தின் வரவேற்பை பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சர்வதேச விண்வெளி மாநாட்டின் போது இந்த ஆய்வுகள் தொடர்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டதாக மருத்துவ ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் அனில் சமரநாயக்க குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டின்போது காடிவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து சிவப்பு மழை மற்றும் அரலகங்வில எரிகல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அரலகங்வில பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பான தொகுப்பை இணையத்தளத்தில் பலர் பார்வையிட்டுள்ளதாக மருத்துவ ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பில் முதற்தடவையாகவே இத்தகைய தொகுப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் அனில் சமரநாயக்க தெரிவித்துள்ளார்

இலங்கை விஞ்ஞானிகளுக்கு கிடைத்த வெற்றியாகவும் இதனைக் கருத முடியும் என மருத்துவ ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

# யாழில் விவசாய புத்தாக்கம்; உதவி வழங்கவுள்ளது கனடா



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய நடவடிக்கைகளை புத்தாக்கம் செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கு தமது அரசாங்கம் முன்வந்துள்ளதாக இலங்கைக்கான கனடா தூதரக ஆலோசகர் ஜெனிபர் லலோன்டி தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனடா தூதரக அபிவிருத்திக்கான ஆலோசகர் ஜெனிபர் லலோன்டி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை சந்தித்து விவசாய அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இச்சந்திப்பில், யாழ். மாவட்டத்தின் விவசாய அபிவிருத்திகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, யாழ். மாவட்ட விவசாயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் யுத்தத்தின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நடவடிக்கைகள் குறித்து இதன் போது விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கூறினார்.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் நீர்ப்பாசனம் மற்றும் குளங்கள் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய தேவை இருப்பதாக அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்ப வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதுடன், உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான களஞ்சிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

அதேவேளை, விசேடமாக கிராமப் புறங்களில் விவசாயிகள் பயன்படுத்தும் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கு பதிலளிக்கையில், இனிவரும் காலங்களில் வட மாகாணம் மட்டுமன்றி யாழ் மாவட்டத்திலும் விவசாய நடவடிக்கைகளில் புத்தாக்கம் ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஓரளவான நிதி வழங்குவதற்கு கனடா அரசாங்கம் முன்வந்துள்ளதாகவும், அதற்கான உதவிகளை தூதரகத்தின் ஊடாக மேற்கொள்ளவுள்ளதாகவும் இலங்கைக்கான கனடா தூர்தரக அபிவிருத்தி ஆலோசகர் உறுதியளித்துள்ளதாக அரச அதிபர் மேலும் கூறினார். (25)

## அம்பாந்தோட்டையில் உருவாகிறது சிறிய தீவு

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகாமையில் மற்றுமொரு சிறிய தீவொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடைத்தொகுதி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கியதாக இத்தீவு உருவாக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதற்காக 808 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலிடப்படவுள்ளதாகவும் இதற்கான நிதி எக்ஸிம் வங்கியிடமிருந்து பெறப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# 2030 இல் இருமடங்காகும் முதியோரின் எண்ணிக்கை

2030ஆம் ஆண்டாகும் போது இலங்கையிலுள்ள முதியோரின் எண்ணிக்கை இரு மடங்காகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையிலுள்ள மக்கள் தொகையில் 10 வீதமானோர் முதியவர்கள் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

2030ஆம் ஆண்டாகும் போது இலங்கையிலுள்ள முதியோரின் வீதம் 22 ஆக உயர்வடையும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. உலக முதியோர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.